KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வழி

ஒக்டோபர் - டிசம்பர் 2015 காலாண்டிதழ் இதழ் - 8

ரூபா 80
இறுவெட்டுடன்
ரூபா 100



## பாதை மாறாத பயணங்கள்

## விழிப்புலனற்றோருக்கு ஓர் வரப்பிரசாதம் DAISY

வெளியீடு
கருவி
மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம்



சிறந்த சலவைக்கும்!
பளிச்சிடும் வெண்மைக்கும்!
Shine
Detergent Liquid
2in1
Shine
Detergent Liquid
500ml
2in1
Shine
Detergent Liquid
300ml
✷ உயர்தர நுட்ப முறையில் தயாரிக்கப்பட்ட Shine திரவ சவர்க்காரம்
✷ ஆடைகளினதும் சலவை இயத்திரத்தினதும் பாவனைக் காலத்தை கூட்டவல்லது
✷ இலகுவில் கரையும் தன்மை கொண்டது
✷ கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது
✷ நீர் சிக்கனத்திற்கு உகந்தது
✷ சாதாரண சலவைக்கும் இயந்திர சலவைக்கும் மிகவும் உன்னமானது
Manufactured & Distributed By:
Karuvi Centre for Social Resource of Differently Abled
1166/15, Arulampalam Lane, Nallur North, Jaffna.
Tel: 021 321 8059 / 0777 158329
email: karuvi.pro@gmail.com

இதழ் 08

# வலு

ஒக்டோபர் - டிசம்பர் 2015

**மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களையும் ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை**

பிரதம ஆசிரியர்

**திரு.க.தர்மசேகரம்**

ஆசிரியர் குழு

திரு.நா.கீதாகிருஷ்ணன்
திரு.செ.பிரிந்தாபரன்
திரு.இ.தனஞ்சயன்
திரு.யோ.சுதாகரன்
திரு.வ.சசிகுமார்
செல்வி ப.சசிகலா

வெளியீடு

**கருவி**

மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்,
இல.1166/15, அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
021 205 4224

Email:
karuvi.org@gmail.com
web: karuvi.org

பொருளடக்கம்

1. சிந்திக்கும் தருணம் -------------- 02
2. விழிப்புலன் மாற்றாற்றல் உடையோரின் வாழ்வில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு ---- 03
3. வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் -------------- 05
4. சுய சிதைவை நோக்கி மனித இனம் ------------------------------ 08
5. விழிப்புலனற்றோருக்கு ஓர் வரப்பிரசாதம் 'DAISY' ---------- 10
6. செய்திச் சாரளம் ------------------ 12
7. வலுவிடம் கேழுங்கள் --------- 14
8. தசரசம் ------------------------------ 15
9. சிறுகதை --------------------------- 25
10. எண்ணக்கிண்ணம் --------------- 27
11. முற்றத்து மல்லிகை -------------- 28
12. எழுதுங்கள் வெல்லுங்கள் ---- 31

தொடர்புகளுக்கு:
நா.கீதாகிருஷ்ணன் - 0766385563
ஆ.பரமேஸ்வரன் - 0779791366

# சிந்திக்கும் தருணம்

வருடத்தில் பல தினங்கள் தற்கால சூழலில் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தினமும் விசேடித்து தாங்கி நிற்கின்ற செய்திகளை கொண்டிருப்பது சிறப்பம்சமாக அமைகின்றது.

அன்னையர் தினம், மகளிர்தினம், தந்தையர்தினம், வெள்ளைப்பிரம்பு தினம் என தினங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். வேகமான உலக ஓட்டத்தில் நின்று நிதானித்து சிந்திப்பதற்கு இத்தகைய தினங்கள் வகை செய்கின்றன என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் வலுவிழப்புடன் கூடிய நபர்கள் தொடர்பான கவனத்தை அக்கறையுடன் உலக மட்டத்தில் நிறுத்துவதற்கு வருடம் தோறும் மார்கழித்திங்கள் 3ம் நாள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடம் விசேட தேவையுடைய நபர்களை சகல ஆற்றல் உடையவர்களாக்குவதற்கு அணுகுதல் மற்றும் வலுவூட்டுதல் விடயங்களை உள்ளடக்குதல் என்னும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு அனுஸ்டிக்கப்படுகின்றது.

மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பும் சந்தர்ப்பங்களும் அவர்களுக்கு ஏற்ற வகையிலான அணுகு வசதிகளும் வழங்கப்படுகின்ற பொழுது திறன்மிக்க வெளிப்பாட்டை இத்தகையவர்களிடம் இருந்து நாம் கண்டுகொள்ள முடியும். அனைவரும் இத்தொனிப்பொருளின் கனதியை உணர்ந்து காத்திரமாக பங்களிக்கின்ற பொழுது வலுவிழப்புடன் கூடிய நபர்களின் சமூக பற்றுதலும் அதிகரிக்கும்.

**பிரதம ஆசிரியர்**
**திரு.க.தர்மசேகரம்**

**அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!**

வலு என்ற இச் சஞ்சிகை உங்களுக்கானதே. எனவே உங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை இச் சஞ்சிகை மூலமாக வெளிக் கொணருங்கள். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகள் மற்றும் உங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை வலுவிடம் கேளுங்கள் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.




**பல வகைப்பட்ட மென்பொருட்கள்**

திரையில் உள்ளதையோ அல்லது ஸ்கான் செய்து பின் தெரியப்படுத்தும் மற்றும் இணையப் பகுதியினை அறிவது தவிர்ந்த மற்றைய வசதிகள் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. அவையாவன.

**01. இலத்திரனியல் நூலகம்**

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான தகைமை வாய்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் யாவும் இங்கு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. இது PDF Magic pro என்பதுடன் இணைந்து தெரியப்படுத்தும்

**02. PDF Magic pro**

சிக்கலான வடிவத்தில் உள்ள அல்லது செயற்படுத்த முடியாத வடிவங்களை அதாவது நிறங்கள் கூடிய வரைபுகள், அட்டவணை, படிவங்கள் என்பனவற்றை இலகுவாக Ms Word இற்கு மாற்றித் தரக்கூடியதாக இருக்கும். நூற்றி ஐம்பத்தைந்து மொழிகளில் மாற்றக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

**03. Predictor Pro**

இங்கு தட்டச்சு செய்யும் எழுத்துக்கள் அல்லது ஏற்கனவே உள்ள ஆவணங்கள் ஒவ்வொன்றையும் வாசித்துக்கொள்ளலாம். இத்துடன் பதிவிறக்கம் செய்யப்பட்ட கோவைகளையும் வாசித்துக்கொள்ளலாம்.

**04.Premier CD/DVD Creator**

இது சீடி ரைற்றரைப் போன்றது. இத்துடன் திரைப் படிப்பான் மென்பொருட்கள் சேர்த்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதனால் செயற்பாட்டை விளங்கப்படுத்த முடியாது. எனவே பொத்தான் அல்லது வேறு செயற்பாட்டின் மூலம் எடுத்துக் கூறும். இது கணினியில் திரைப் படிப்பான் செயற்பாட்டு நிலையில் இருக்கும் போது, இலகுவாக செயற்படுத்தி தெரியப்படுத்தும்.

**05. கதைக்கும் கணிப்பான் (Talking Calculator)**

இதன் பாவனை ஒரு முழுமையான கணிப்பானின் செயற்பாடாகும். திரைப்படிப்பான் மென்பொருட்கள் இருந்தாலோ அல்லது இல்லாவிட்டாலோ இயங்கக் கூடியது. இங்கு காணப்படும்

பொத்தான்கள் மிகவும் உருப்பெருத்தனவாக இருக்கும். இவற்றின் தெரியப்படுத்தும் பகுதி மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது தற்பொழுது வழங்கப்படும் எண் பதியப்படும் இடம், பெறுபேறு தரப்படுத்தும் பகுதி, இச் செயற்பாட்டின் போது கொடுக்கப்பட்ட முன்னைய எண்கள் அனைத்தினையும் காட்டும் பகுதி. கொடுக்கப்பட்ட எண்கள் அனைத்தும் நினைவகத்தில் பாதுகாப்பாக இச் செயற்பாடு முடிக்கும் வரை தற்காலிகமாக சேமித்து வைத்திருக்கும்.

**06. Talking Checkbook**

வரையறையற்ற பதிவுகளைக் கொண்ட கணக்கீடுகளை செய்வதற்கேற்ற பகுதியாகும். இது JAWS அல்லது Window - Eyes என்பவற்றின் உதவியுடன் செயற்படும். எல்லா வகையான இறுதி விபரங்களையும் Ms word இல் மாற்றிச் சேமித்துக் கொள்ளலாம். இவ் கணித்தல் அனைத்தினையும் Ms excel அல்லது Lotus என்பவற்றிற்கு மாற்றலாம். இதில் நாட்காட்டி மற்றும் கணிப்பான் என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளது.

**07. Text to Audio**

இவ்மென் பொருட்கள் இலத்திரனியல் ஆவணங்களை ஒலி வடிவ கோப்புக்க்ளாக மாற்றும். இதை E Speak எனும் மென்பொருளை கணினியில் நிறுவுவதன் மூலம் தட்டெழுத்து செய்த ஆவணங்களை ஒலி வடிவத்திற்கு மாற்றலாம். முக்கியமாக இதில் நாங்கள் NHM Writer ஐ பயன்படத்தி தமிழில் தட்டச்சு செய்த ஆவணங்களை அல்லது Unicode முறையில் இணையத் தளங்களில் உள்ள தமிழ் ஆவணங்களை அல்லது ஒலி வடிவுக்கு மாற்றம் செய்து wave வடிவ கோப்பாக கணினியில் சேமிக்க முடியும்.

**08. Ultimate Talking Dictionary**

இவ் மென்பொருட்கள் இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட சொற்களை கொண்ட சொல் களஞ்சியமாக காணப்படும் குறிப்பிட்ட சொல்லை எடுத்து அதன் கருத்தினை அல்லது அதற்கு ஏற்ற சொல்லை தந்து உதவும். இதில் ஒத்தசொல் எதிர்மறைசொல், சரித்திர வரலாறுகள், பேச்சுவழக்கில் உள்ள சொல், பழ மொழிகள் என்பன உள்ளடங்கப்பட்டுள்ளது.

**9.Mobil Speak**

இம் மென்பொருளை இயங்குதளம் உடைய கைத்தொலைபேசிகளுக்கு நிறுவுவதன் மூலம் எமக்கு வரும் குறுஞ்செய்திகள் தொடக்கம் வேறு செயற்பாடுகளை நாமே வாசித்து அறிந்து கொள்ளமுடியும்.

(தொடரும்)



# வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

நா. கீதாகிருஷ்ணன்,
நயினாதீவு.

## ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங்
## Stephen William Hawking

உலகில் சாரசரி மனிதனாக பிறந்து வாழ்ந்து கல்வியிலும் ஏனைய துறைகளிலும் உயர்ந்து ஓடியாடித் திரிந்த ஒருவன் திடீரென அங்க இழப்புக்களுக்கு உள்ளாகும் போது அவனது மன நிலை எவ்வாறு இருக்குமென எவராலும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. இருந்தும் இவ்மன வலிகளை எல்லாம் உரமாக்கி ஒருவர் உலக விருட்சமாக எழுந்து நிற்கிறார் என்றால். அவரது நம்பிக்கையும் மனவலிமையும் விடாமுயற்சிகளுமே காரணமாகின்றன. ஆம் இவ்விதம் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஸ்டீபன் ஹாசிங் என்பவர் தன் வாழ்வின் வலிகளை எவ்வாறு உரமாக்கி உலக விருட்சமானார் என்பது பற்றி பார்ப்போம்.

இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டில் (Oxford) 1942 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி Frank மற்றும் Isobel Hawking தம்பதிகளுக்கு ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் (Stephen william hawking) பிறந்தார். ஒரு கோட்பாட்டு இயற்பியலாளரான இவர் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் கணிதத்திற்கான லுக்காசியின் பேராசிரியராக உள்ளார்.

இவரது முக்கியமான ஆய்வுத் துறைகளாக அண்டவியல் (Cosmology) மற்றும் குவாண்டம் ஈர்ப்பு (quantum Gravity) என்பன விளங்குகின்றன. இவரது முக்

## பாதை மாறாத பயணங்கள்

அமைதியான நதியினில் ஓடம் பயணிக்கும் போது அது சுகமான அனுபவத்தை தரும். ஆனால் பயணத்தின இடையே எதிர்பாராத விதமாக ஏற்படும் மழை, புயல் என்பவற்றால் ஓடம் தத்தளிக்கும் போது அது சுமையான துன்பமாகிவிடும். சில மணித்துளிகளின் பின் புயல், மழை தணிந்து மீண்டும் ஏற்படும் அமைதியான நீரோட்டம் மறுபடியும் ஓடத்தை வழமைக்கு நகர்த்தி சுகமான அனுபவத்தை தரும். இது போன்றது தான் மனித வாழ்க்கையும். சில மனிதர்கள் இந்த சில மணித் துளிகளுள் பொறுமை இழந்து மனம் எனும் துடுப்பை கைவிட்டு விடுவதனால் வாழக்கை ஓடம் நதி நீருள்மூழ்கிப் போகின்றது. ஆனால் பலர் மனம் எனும் துடுப்பை நம்பிக்கையினால் இறுகப் பிடித்து அமைதியான நீரோட்டத்தினுள் மீண்டும் நகர்த்தி வாழ்க்கையில் வெற்றி கொண்டு விடுகின்றனர்.

உலகில் வாழ்க்கையில் தோற்றவர்களை விடவும் வென்றவர்களை விடவும் தோற்று வென்றவர்களே அதிகம், எனவே தோல்விகள் வெற்றிக்கான படிக்கற்கள் என உணர்ந்து பயணம் செய்தால் நிச்சயம் வெற்றி இலக்கை அடையுமுடியும்.

கியமான பங்களிப்புக்களில் கருங்குழி (Black holes)களுக்கும்வெப்பஇயக்கவியலுக்குமான தொடர்புகள் பற்றிய கட்டுரைகள் காணப்படு கின்றன. கருங்காகுழியிலிருந்து ஒளியுட்பட எதுவுமே வெளியேற முடியாது என்று நம்பப் பட்டதற்கு மாறாக கருங்குழிகளில் இருந்து துணிக்கைகள் வெளியேறுகின்றன என்றும் இதனால் இவை காலப் போக்கில் இல்லாமல் போய்விடுகின்றன என்றும் ஆய்வராட்சிகள்



இவர் 21 வயதாக இருக்கும் போது அமையோட்ரோபிக் லோட்டரல் ஸ்கவெல ரோசிஸ் (Camyotrophic Lateral Sclerosis) எனும் நரம்பு நோயால் தாக் கப்பட்டார். குணப்படுத்த முடியாத இந் நோயின் காரணமாக இவர் கை, கால் முதலிய உடல் இயக்கங்கள் பாதிக்கப் பட்ட நிலையில் பேச்சினையும் இழந்தார் எனினும் கணினியின் ஊடாக மற்றவர் களுடன் தொடர்பு வைத்துக்கொண்டார்.

ஊடாக சுட்டிக்காட்டினார். இவ்வாறு வெளி யேறும் கற்றைகளுக்கு ஹாக்கிங் கதிர்வீச்சு என்று பெயரிட்டனர்.

இயற்பியல் ஆராய்ச்சிகளிலும் எழுத்து துறை யிலும் பொது வாழ்விலும் மிகவும் ஈடுபாடு உள்ளவராக திகழ்ந்தார். இவர் எழுதிய நேரத் தின் ஒரு சுருக்க வரலாறு (A Brief history of time) மற்றும் The universe in a nutshell ஆகிய இரு நூல்களும் உலகம் முழுவதிலும் விற்ப னையாகி சாதனை படைத்தன.

ஸ்டீபன் ஹாக்கிங் லூக் காசியன் பேரா சிரியராகும் போது அவரால் நடக்க முடியாது. தானாகவே சாப்பிடவும் முடியாது. கீழே சாயும் அவரது தலையை மீண்டும் அவரால் உயர் தவும் முடியாது. அவருக்கு மிகவும் நெருக்க மானவர்களால் மட்டும்தான் அவர் என்ன பேசுகின்றார் என்பதை புரிந்துகொள்ள முடிந் தது. அந்தளவுக்கு அவரது பேச்சுத் திறனும் குன்றியது. ஆனாலும் ஹாக்கிங் என்றுமே செயலற்றுப்போய்விடவில்லை. அவர் என்றுமே கணிதவியல் நிபுணராகவும் இயற்பியல் அறி ஞராகவும் உள்ளார். கேம்பிறிச் பல்கலைக் கழகத்தில் லூக்காசியன் பேராசிரியர் பதவி மிகவும் மதிப்பு வாய்ந்தது. 1663 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்ட இப் பதவியில் 2 ஆவது பேராசிரியராக ஐசாக் நியூட்டன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஸ்டீபன் ஹாக்கிங் அங்க இழப்புகளுக்கு உள்ளான நிலையிலும் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளமை இக் காலத்தில் வரலாற்றுச் சாதனை என்றே குறிப்பிட வேண் டும்.

2007 ஜனவரி 8 ஆம் திகதி தனது 65 ஆவது பிறந்த நாளன்று தான் விண்வெளிப் பயணம் செய்யப் போவதாக அறிவித்தார். இது சாத்தி யமாகும் நாள் இவரது வாழ்வியல் வரலாற் றில் பொன் எழுத்துக்களால் பதிக்கப்படும்

என்பதில் ஐயமில்லை.

இவருக்கு 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் திகதி அமெரிக்க வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பராக் ஒபாமா தலைமையில் இடம்பெற்ற Future Of Humanity என்னும் நிகழ்வின்போது Presidential Medal Of Freedom என்ற விருது வழங்கப்பட்டது.



ஹாக்கிங் Jane Wilde என்பவரை காதலித்து 14 ஜூலை 1965 ஆம் ஆண்டு திருமணம் செய்தார். இருவரும் இணைந்து இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள் என்பவற்றுக்குச் சென்று பலரது ஆதரவினையும் பெற்றனர். இவர் ஏற்கனவே தனது நூல்கள் மூலமாகவும் ஆராய்ச்சிகள் மூலமாகவும் பேராசிரியர் காரணமாகவும் பலருக்கு தெரிந்த ஒருவராக விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதிய நூல்களில் நேரத்தின் ஒரு சுருக்க வரலாறு, கருங்குழிகள், மற்றும் குழந்தைப் பிரபஞ்சங்கள் போன்றன சாதாரண மக்களுக்கு விளங்கும் வகையில் உருவாக்கப்பட்டவை. இயற்பியல் அறிஞரான இவர் அண்ட வெளியின் தோற்றத் தன்மை மற்றும் அதன் பரிணாம வளர்ச்சி என்பன பற்றி ஆராய்ந்து மகத்தான கண்டு பிடிப்புக்களை வெளியிட்டவர் ஆவார். இவர் தனது நூல்களில் யாவரும் விளங்கிக்கொள்ளத்தக்க முறையில் இது தொடர்பான கட்டுரைகளை அமைத்துள்ளார்.

போராட்டங்கள் நிறைந்தது தான் வாழ்க்கை ஆனால் சிலருக்கு வாழ்க்கையே போராட்டமாகி விடுகின்றது. ஸ்டீபன் ஹாக்கிங் என்பவருக்கு அவரது 21 வயதில் ஏற்பட்ட நோய் அவரது வாழ்க்கையினை போராட்டத்துக்குள் தள்ளிவிட்டது. எனினும் அவர் போராடி வெற்றி பெற்றார். அங்கங்கள் செயற்படாத நிலையிலும்அவர் செயற்பட்டார். அங்க இழப்புக்கள் ஏற்பட முன்னர் அவர் எந்த நிலையில் இருந்தாரோ அந்த நிலையிலேயே இருந்து முன்னேறினார். இதில் இருந்து ஒருவரது முன்னேற்றத்திற்கு அங்க இழப்புக்கள் தடையாக அமையாது என்பது நிஜமாகின்றது.

இன்று உலகில் சிலர் சின்னச்சின்ன இழப்புக்களைக் கண்டு மனம் குழம்பி வாழ்க்கை மீது வெறுப்பு கொள்கின்றனர். தன்னம்பிக்கையினையும் முயற்சிகளையும் கைவிட்டு வாழ்வு முடிந்ததாக கற்பனை செய்து விடுகின்றார்கள். பல மாற்றுத் திறனாளிகளும் இவ்வாறான நிலைக்கு உள்ளாகின்றமையினைக் காண முடிகின்றது. எனவே இவர்கள் எல்லோருக்கும் இந்த ஸ்டீபன் ஹாக்கிங் என்பவரது வரலாறு ஒரு வாழ்க்கை பாடமாக அமையும் என நம்புகின்றேன். எனவே ஒவ்வொரு வரும் இவ் வரலாற்றினைபடித்து வாழ்க்கையில் முன்னேற்றமுடன் மகிழ்வாக வாழ வேண்டும்.

# சுய சிதைவை நோக்கி மனித இனம் : பேராசிரியர் ஸ்டீபன் ஹாக்கிங் எச்சரிக்கை

**BBC தமிழ்**

மனித இனம் தானே உருவாக்கிய தொடர்ச்சியான ஆபத்துக்களால் அழிவை சந்திக்கலாம் என்று பேராசிரியர் ஸ்டீபன் ஹாக்கிங் எச்சரித்திருக்கிறார்.

அணு ஆயுதப்போர், புவி வெப்பமாதல் மற்றும் மரபணு மாற்றி அமைக்கப்பட்ட வைரஸ்கள் ஆகிய மூன்று காரணிகளை அவர் குறிப்பான ஆபத்துக்களாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் ஏற்படக்கூடிய எதிர்கால முன்னேற்றங்கள் மற்றும் நிகழ்வுகள் தவறாகப் போவதற்கான புதிய வழிகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான பிபிசியின் ரீத் உரை நிகழ்த்தும்போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

அண்டவெளியின் black holes பற்றிய விரிவான ஆய்வுகள் குறித்து அவர் உரை நிகழ்த்தினார். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதிலில் அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

மனித இனம் எதிர்காலத்தில் வேறு உலகங்களில் சென்று குடியேற்றங்களை அமைப்பது சாத்தியமானால் அழிவில் இருந்து தப்பலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

"குறிப்பிட்ட ஒரு ஆண்டில் உலகம் ஒரு பேரழிவில் சிக்கி அழிந்துவிடும் என்பதற்கான சாத்தியம் மிக மிகக் குறைவானதுதான் என்றாலும், காலம் செல்லச் செல்ல, ஆண்டுகள் கூடக்கூட அதற்கான சாத்தியம் தொடர்ந்து அதிகரித்தபடியே இருக்கும். அடுத்த ஆயிரம் ஆண்டுகள் அல்லது பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அப்படி நடப்பதற்கான சாத்தியம் ஏறக்குறைய உறுதிசெய்யப்பட்ட ஒன்றாகிவிடும்" , என்றார் பேராசிரியர் ஸ்டீபன் ஹாக்கிங்.

"அப்படி நடப்பதற்கு முன்னர் மனிதர்கள் அண்டவெளியின் மற்ற இடங்களுக்கு, கோள்களுக்கு அல்லது நட்சத்திரங்களுக்கு பரவி வாழப்பழகியிருக்க வேண்டும். அப்படி நடந்தால் நாம் தற்போது வாழும் இந்த உலகத்துக்கு அழிவு ஏற்பட்டால் மனித இனமே அழிந்துவிடும் என்கிற நிலைமை உருவாகாது" , என்றார் அவர்.

"அதேசமயம், பூமிக்கு வெளியே அண்டவெளியில் தன்னிறைவு பெற்ற தனி உலகமாக மனிதர்கள் குடியேறி வாழ்வது என்பது குறைந்தது அடுத்த நூறு ஆண்டுகளுக்கு சாத்தியமில்லை. அது நம்மால் முடியும் என்று தோன்றவில்லை. எனவே அடுத்த நூறாண்டு காலகட்டத்தில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்" , என்று அவர் யோசனை தெரிவித்தார்.

அறிவியல்துறையின் முன்னோடிகளில் ஒரு

வரான பேராசிரியர் ஸ்டீபன் ஹாக்கிங் அறிவியல் துறையின் முன்னேற்றங்களே மனித இனத்துக்கான புதிய ஆபத்துக்களை உருவாக்கக்கூடும் என்று கூறுவது சுயமுரணாக சிலரால் பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்பே கூட Artificial intelligence (AI) என்று ஆங்கிலத்தில் குறிக்கப்படும் இயந்திர அறிவு மிகப்பெரிய அளவில் முன்னேற்றமடைந்து மனித இனத்தையே எதிர்காலத்தில் அழிக்கக்கூடும் என்றும் ஹாக்கிங் எச்சரித்திருந்தார்.

அதேசமயம் அதை எதிர்கொள்வதற்கான வழிகளும் கண்டுபிடிக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

“அறிவியல் துறையில் நாம் முன்னேற்றங்களை நிறுத்தப் போவதில்லை. அறிவியலில் நாம் பின்னோக்கியும் செல்லப்போவதில்லை. எதிர்கால ஆபத்துக்களை இனம் கண்டு அதை கட்டுப்படுத்த வேண்டும். நான் ஒரு நம்பிக்கையாளன். நல்லதே நடக்கும் என்று நம்புகிறேன். நம்மால் அதை செய்ய முடியும் என்றும் நம்புகிறேன்” , என்றார் ஸ்டீபன் ஹாக்கிங்.

அண்ட வெளியின் அற்புதங்களைக் கண்டு தாம் தொடர்ந்தும் ஆச்சரியமடைவதாக கூறுகிறார் ஹாக்கிங்


இளம் விஞ்ஞானிகளுக்கு என்ன ஆலோசனைகள் சொல்கிறீர்கள் என்று அவரிடம் கேட்டபோது, நாம் வாழும் பேரண்டம் “பரந்து பட்டது, சிக்கலானது என்பதை உணரும் பேராச்சரிய மனோநிலையை” அவர்கள் தொடர்ந்து தம்முள் தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

“என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தை சொல்வதானால், உயிரோடு’இருப்பதும் கோட்பாட்டுரீதியான இயற்பியல் துறையில் ஆய்வுகள் செய்வதும் என் வாழ்வின் உன்னதமான காலம் என்றே சொல்வேன். முன்பு யாருமே கண்டிராத ஒரு விஷயத்தை நாம் முதல்முறையாகக் கண்டுபிடிக்கும் அந்த அற்புதத் தருணத்தைப் போல வேறொரு தருணத்தை ஒப்பிட்டு சொல்லவே முடியாது. அப்படியானதொரு அற்புதத் தருணம் அது” , என்றார் பேராசிரியர் ஹாக்கிங்.

அதேசமயம், எதிர்கால ஆய்வாளர்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றங்கள் உலகை எப்படி மாற்றியமைக்கின்றன என்பதை நன்கு உணர்ந்திருப்பது அவசியம் என்றும், பொதுமக்கள் அதை புரிந்துகொள்ள அவர்கள் உதவ வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அன்பார்ந்த வாசகர்களே!

மாற்றுத் திறனாளிகள் தொடர்பாகவோ அல்லது மாற்றுத் திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தக்கூடிய வகையில் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியனவாக ஆக்கங்களை உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். எனவே உங்கள் ஆக்கங்களை கவிதையாகவோ அல்லது சிறுகதையாகவோ அல்லது கட்டுரையாகவோ அல்லது செய்தித் துணுக்குகளாகவோ எமக்கு எழுதி அனுப்புங்கள் தரமான உங்களது ஆக்கங்கள் தொடர்ந்து வரும் வலுவில் பிரசுரிக்கப்படும் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்




# விழிப்புலனற்றோருக்கு ஓர் வரப்பிரசாதம் '*DAISY*'

சுயதேவைகளின் நிவர்த்திக்கான ஓட்டத்தின் நடுவில் உதவிக்கரம் தேடி சமூகத்தின் சவால்களை எதிர்கொள்ள துடிக்கின்ற பலர் எம் பார்வையில் இருந்து தூரே செல்கிறார்கள். எம் சமூகத்தில் அவர்கள் தேவைகளை நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தில் விழிப்புலனற்றோருக்கு எம்மால் முடிந்த உதவியை செய்ய வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

Digital Accessible Information System என்பதன் சுருக்கமே Daisy என கூறப்படுகிறது. இது ஆறு விதமான பிரிவுகளைக் கொண்டுள்ளது அதிலே விழிப்புலனற்றவர்கள் மட்டும் பயன்படுத்தக் கூடிய வகையில் Audio with NCC (NCC – Navigations Control Center) – என்ற பகுதி காணப்படுகிறது.

இந்த முறையானது வழமையான ஒலிநாடாவில் பதிவேற்றி கேட்பதிலும் சற்று வேறுபட்டது. சாதாரணமாக நாம் ஒலிப்பதிவு செய்து வழங்குவது CD Player இலும் கணனியிலும் கேட்க மட்டும் தான் முடியும். ஒரு புத்தகத்தின் 10ஆவது பக்கத்திலுள்ளதை கேட்பதாயினும் ஆரம்ப இடத்தில் இருந்தே அதனை செவிமடுக்கிறோம். ஆனால் இந்த Daisy முறையிலே காணப்படும் ஒலிப்பதிவானது ஒவ்வொரு புத்தகத்தின் பக்க இலக்கங்களும் குறிப்பிடப்பட்டு அதனை ஒலிப்பதிவு செய்யும் போது நாம் எத்தனையாவது பக்கத்திலுள்ள விடயத்தினைக் கேட்க வேண்டுமோ அதன் பக்க இலக்கத்தினை கொடுத்து அதனை செவிமடுக்க முடியும்.

கணனி அறிவுடைய ஒருவர் இதனை இலகுவில் கையாள முடியும். உலகத்திலே வாழும் அனேகரும் இன்று கணனியை கையா ளத் தெரிந்தவர்களாகவே காணப்படுகிறார் கள். விழிப்புலனற்றவர்களில் பலரும் கணனிகளை கையாளத்தெரிந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

கணனியில் மட்டுமன்றி Pendrive, கையடக்க தொலைபேசியில் கூட இவற்றை பதிவேற்றம் செய்து அதனை செவிமடுக்க முடியும். அதுமட்டுமன்றி வெளியில் செல்லும் போது அவற்றை கைபேசியில் பதிவு செய்து வைத்திருப்பதை

கேட்டு தமக்கு தேவையான விடயங்களை மற்றவர்கள் உதவியற்று இலகுவில் அறிய மிகவும் வாய்ப்பளிக்கிறது.

கணனியில் இதனை ஒலிப்பதிவு செய்வது என்பதனை எடுத்து நோக்கும் போது

அதற்கான தனியான ஒரு மென்பொருள் அதாவது நாம் தட்டச்சு (Type) செய்ய வேண்டும் எனில் எம்.எஸ் வேடில் (MS.Word) இல் ரைப் செய்வது போல புத்தகத்தினை ஒலிப்பதிவு செய்ய சிக்துனா டார் 3 (Sigtuna DAR3) என்ற ஒரு மென்பொருளை கணனியில் பதிவேற்ற வேண்டும். அந்த மென்பொருளினை பயன்படுத்தி இவற்றை இலகுவில் ஒலிப்பதிவு செய்ய முடியும். இவற்றை செயற்படுத்த தேவையானது ஒரு கணினியும் Headphone உம் மட்டுமே.

இன்று பாடசாலையில் வழங்கப்படும் புத்தகங்களை விழிப்புலனற்றோருக்கு வாசித்து விடுவதற்கு ஆட்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி ஒருவருக்கு வாசித்து பின்பும் அதே வகுப்பை சேர்ந்த இன்னொருவருக்கு அதே பாடப்புத்தகத்தை திரும்ப வாசிக்கும் நிலை ஏற்படுகிறது. அவ்வாறான நிலையை தவிர்ப்பதற்கு ஒலிப்பதிவு செய்து அதனை பிரதி செய்து சகல மாணவர்களிற்கும் வழங்க பலரது நேரம் மிச்சமாகும். இதற்கான செயன்முறையை பற்றிய இலவசகையேடு அனைவருக்கும் கிடைக்கும் விதத்தில் வழங்கப்பட இருக்கிறது.

**இந்தக் கையேடு தொகுத்து தருவதற்கான நோக்கமும் தேவையும்**

விழிப்புலனற்ற மாணவர்களுக்கு கல்வி சம்பந்தமான நூல்களை அவர்கள் இலகுவில் கேட்டு கற்றுக்கொள்ள இந்த Daisy முறையிலான ஒலிப்பதிவு உதவுகிறது. இன்று எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. அவை அனைத்தும் அவர்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக இல்லை. அதனை வாசித்து விடுவதற்கு ஏனையோருக்கு தற்போது நேரம் போதாது இருக்கிறது. அதனை கருத்தில் கொண்டு எம் போல், விழிப்புலனற்றவர்களும் அனைத்து நூல்களையும் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இந்த DAISY முறையிலான தொகுப்பை வெளியிட்டு உள்ளோம்.

**நோக்கம்**

இதனை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் தம்மால் அவர்களுக்கு உதவ விரும்பியவர்கள் ஒலிப்பதிவு செய்து நூல்களை வழங்க வேண்டும். அத்துடன் இக்கைநூல் அனைவரது கைகளிலும் இருந்தால்தான் அதனை செயற்படுத்த முடியும். ஆகவேதான் இதனை இலவசமாக அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணிணியில் ஒலிப்பதிவு செய்ய விரும்பியவர்கள் தங்களிடம் இருக்கும் நூல்களை ஒலிப்பதிவு செய்து இவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது முக்கிய குறிக்கோளாகும்.

**வேண்டுகோள்**

இனிவரும் காலங்களில் நூல்களை வெளியிடுபவர்களும். தற்போது நூல்களை வெளியிட்டவர்களும் இந்த Daisy முறையிலான வடிவில் நூல்களை வழங்கி விழிப்புலனற்றோருக்கும் தாங்கள் மற்றவர்களுக்கு சொல்ல வந்த செய்தி அல்லது தங்களின் ஆக்கங்கள் போய் சேர துணைபுரிய வேண்டும்.

**சுபோதினி சபாரத்தினம், மாதகல்**

# செய்திச் சாளரம்

### பாராளுமன்ற உறுப்பினர் ஆனார் போரில் காலை இழந்த பெண்மணி சாந்தி சிறீஸ்கந்தராஜா

ஒகஸ்ட் 17, 2015 இல் நடைபெற்ற இலங்கையின் 15 ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் சாந்தி சிறீஸ்கந்தராஜா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார். சிறிதளவு விருப்பு வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்த இவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார்.

2009 ஆம் ஆண்டு வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது தனது காலை இழந்த இவர் பாராளுமன்றம் சென்றதன் மூலம் போரில் பாதிக்கப்பட்டு அங்க இழப்புகளுடன் வாழும் மாற்றுத் திறனாளிகளுக்கு நல்ல வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்காக குரல் கொடுப்பார் என எதிர்பாக்கப்படுகின்றது.

### ஊனமுற்ற நபர்கள் தொடர்பான அரச கலைவிழா பாட்டுப் போட்டியில் கருவி முதலிடம்

கலாச்சார அலுவல்கள் திணைக்களம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய 2014 ஆம் ஆண்டுக்கான ஊனமுற்ற நபர்கள் தொடர்பான அரச கலை விழாவில் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் பாட்டுப்போட்டியில் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது. மேலும் இப்போட்டியில் கருவி நிறுவனம் நாடாக போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

கலாச்சார அலுவல்கள் திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து நடாத்திய இறுதிப் போட்டிகள் கடந்த 2015 மே மாதம் 22 ஆம் திகதி கொழும்பு 07, ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ளதேசிய கலாபவனத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### சாயி பஜனையும் கலை நிகழ்வும்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 90 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையமும் கனடா சாயி இல்லமும் இணைந்து நடத்திய சாயி பஜனையும் கலை நிகழ்வுகளும் கடந்த 26.08.2015 அன்று நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

கருவியின் தலைவர் திரு.க.தர்மசேகரம் தலைமையில்நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதீதியாக கடனா சாயி இல்லத்தைச் சேர்ந்த சாயி சகோதரர் திரு. மா.ரவீந்திரன் அவர்கள் கலந்துகொண்டார்.

இந் நிகழ்வில் சாயி பஜனை மற்றும் கருவி சமூக வள நிலைய இராக ஸ்ருதி இசைக்குழு

வின் பக்தி கானங்கள் என்பனவும் இடம்பெற்றன.

இவ்விழாவில் சாயி பக்தர்கள் கருவி அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

**வடக்கு மாகாணத்தில் 42 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள்**

போர் காரணமாக வடக்கு மாகாணத்தில் மட்டும் 42 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் இருப்பதாக வடமாகாண சபை சுகாதார அமைச் சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா தெற்கு இலுப்பைக்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற வாழ்வாதார திட்டம் வழங்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் 42 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். இவர்களுக்கான கொடுப்பனவும் தபாலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் சக்கர நாற்காலி பயன்படுத்துவோருக்கு பொருத்தமான மலசல கூடத்தை அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக வடமாகாண சபையால் ஒரு கோடி 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது எனவும் தெரிவித்தார்.

**நினைவுநாளும் நினைவுப் பேருரையும்**

வாழ்வக நிறுவுனர் கலாநிதி அன்ன லட்சுமி சின்னத்தம்பி அவர்களின் நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த 11.09.2015 அன்று வாழ்வக செல்லா மண்டபத்தில் தலைவர் திரு. ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். இந்திய தூதரக துணைத் தூதுவர் ஸ்ரீமான் ஆறுமுகம் நடராஜன் சிறப்பு அதிதிகளாக யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ. கணேசமூர்த்தி அவர்களும் தேசிய சேமிப்பு வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. விக்டர்கிறேசன் அவர்களும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் திரு. மா.இளம்பிறையன் அவர்களும் மட்டக்களப்பு ஆரயம்பதி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திரு.ஆ.பரமேஸ்வன் அவர்களும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு.எச்.எல். துஸ்மந்த அவர்களும் கலந்து சிறப்பித்து இருந்தனர். மேலும் இந் நிகழ்வுக்கான ஆசியுரையினை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் அவர்கள் வழங்கியிருந்தார். நினைவு நாள் நினைவுப் பேருரையினை "வலுக்குன்றலும் ஊறுபடும் தன்மையும் தமிழர்களின் எதிர்காலமும்" எனும் தொனிப் பொருளில் சுகாதார அமைச்சின் சமுதாய மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் அவர்கள் நிகழ்த்தி இருந்தார்.

இந்த நிகழ்வில் ஒலிம்பிக் பதக்கம் பெற்ற சிவபூமி மாணவர்கள் கௌரவிப்பு முதற்கட்ட பாடசாலை மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**வடமாகாணத்தில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு விசேட புனர் வாழ்வு**

வட மாகாணத்தில் போரினால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வுச் செயற்றிட்டம் ஒன்றை வடக்கு மாகாண

சுகாதார மற்றும் புனர்வாழ்வு அமைச்சு மேற் கொண்டு வருவதாக அமைச்சர் சத்தியலிங் கம் தெரிவித்தார்.

இப் பாதிப்புக்கு உள்ளாகி பலர் சுயமாக இயங்க முடியாத நிலையில் உள்ளனர். இவர் கள் பெரும்பாலும் வீடுகளில் வைத்தே பராம ரிக்கப்படுகின்றனர். சில வீடுகளில் இவர் களை பராமரிப்பதில் பிரச்சினைகள் இருக் கின்றன.

இவ்வாறானவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கான நிலையம் ஒன்று 2014 இல் வைகறை என்னும் பெயரில் வவுனியாவில் இயங்கி வருகின்றது. வடக்கு மாகாண சுகா தார அமைச்சின் கீழ் இயங்கி வரும் இவ் விசேட பிரிவு வவுனியா பொது மருத்துவ மனை நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின் றது. இங்கு ஒரு தடவை 20 முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்கி இருந்து மருத்துவசிகிச்சைகள்,உளவளத்துறைஆலோ சனைகள் மற்றும் தமது வேலைகளை தாமா கவே செய்யக்கூடியதான பயிற்சிகள் என்பன அளிக்கப்பட்டு கட்டம் கட்டமாக வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். பின்னர் இவர் களுக்கான விசேட மலசல கூடம் அமைப்ப தற்கு மானிய உதவி வழங்கப்படுகின்றது. மேலும் இவர்களுக்கு சுய தொழில் முயற் சிக்கான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக் கப்படுகின்றது.

## வலுவிடம் கேழுங்கள்

*எமது கிராமத்தில் இருக்கும் ஒருவரது குடும்பத்தில் உள்ள 3 பிள்ளைகளில் ஒரு பிள்ளை உளவளர்ச்சி குறைபாடுடையவர். அவரை அவரது வீட்டுக்கு அண்மையில் உள்ள பாடசாலையிலேயே சேர்த்துள்ளனர். ஆனால் அங்கு அப்பிள்ளைக்குரிய கற் பித்தல் வசதிகள் இல்லை. இவரை பொருத்தமான பாடசாலையில் சேர்பதற்கு பெற் றோர் விருப்பமின்றி உள்ளனர். இப்பிள்ளையின் எதிர்கால வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும்?*

**(ராகுலன் சுன்னாகம்)**

முதலில் சமூக அக்கறையோடு இந்தக் கேள்வியைத்தொடுத்துதற்கு தங்களுக்குவலு வின் நன்றிகள் ஒன்றின் பிள்ளையின் விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பே நிலையான பலனைத் தரும். அந்த பெற்றோர்களை சந்தித்து அவர்களின் வாழ்விடத்திற்கு அருகாமையில் உள்ள விசேட கல்வி அலகுள்ள பாடசாலையில் பிள்ளையை இணைப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள். வலுவிழிப்புடன் கூடிய நபர்களுக்காக பணியாற்றுகின்ற நிறுவனங்களோடு அந்த பெற் றோரை தொடர்பு படுத்தி விடுவதும் நல்ல பலனைத்தரும்.

அவர்களது வாழ்விடம் அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் உள்ள பெண்கள் சிறுவர் பிரிவோடு தொடர்பு கொண்டு அங்கு பணியாற்றும் அதிகாரிகளினது உதவியை பெறுவதிலும் விசேடகல்வி, ஆசிரியர்களது சேவையை பெற்றுக் கொள்வதிலும் பிள்ளையின் பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்க ஏதுவாக அமையும்.



# தசரசம்

**இலக்கியம், இலங்கை, உலகம், விண்வெளி, விளையாட்டு, மருத்துவம், தாவரம், விலங்கு, பிரபலம், அதிசயம்**

**தொகுப்பு நா.கீதாகிருஷ்ணன்**

## இலக்கியம்

**புறநானூறு (துறை பொது மொழிக்காஞ்சி)**

பாடியவர் - கடலுண்மாய்ந்த இளம் பெருவழுதி

உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்ந்த மினயவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனினுயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந் ருண்மை யானே

தேவர்களுக்குரிய சாகா மருந்தாகிய அமிர்தம் தெய்வத்தாலோ அல்லது தவத்தாலோ கிடைத்தாலும் அதனை இனியது எனக் கருதி தனித்து உண்ணாதவர், யாரோடும் கோபம் கொள்ளாதவர், பிறர் அஞ்சத் தகு துன்பத்திற்கு தாமும் அஞ்சி அதனை நீக்குவதற்கு சோம்பிலிராதவர், புகழ் வருமாயின் தமது உயிரையும் கொடுப்பவர், பசி வரும் கருமங்களாயின் உலகம் முழுதும் தமக்கு கிடைப்பது ஆயினும் அக் கருமத்தை மேற்கொள்ளாதவர், மனக் கவலையற்றவர் இத் தன்மைகள் உடைய மாட்சிமைப்பட்ட குணங்கள் உடையவர்கள் தமக்கென எதுவும் செய்யார். பிறர் நன்மைக்காக விடாமுயற்சியோடு முயல்வர். இத்தகைய சான்றோர் இருப்பதனாலேயே இவ்வுலகம் சிறப்புடன் வாழ்கின்றது.

## சிங்கம்

தமிழில் ஆண் சிங்கத்தினை அரிமா என்றும் பெண் சிங்கத்தினை சிம்மம் என்றும் அழைப்பர். பாலூட்டி விலங்கான சிங்கம் மாமிசங்களை மட்டும் உண்ணும். ஊன் உண்ணி வகையைச் சேர்ந்தது. பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த இச் சிங்கங்கள் உறுமும் பூனைகள் பேரினத்தையும் பா.வி.யோ, பிரந்தாராவியோ இனங்களையும் சேர்ந்தவை.

ஆண் சிங்கங்கள் 150 - 250 கிலோ எடையும் பெண் சிங்கங்கள் 120 - 150 கிலோ எடையினையும் கொண்டவை. சிங்கங்களது ஆயுட்காலம் 10 - 16 ஆண்டுகள் மட்டும் தான். இதில் பெண் சிங்கங்கள் 16 ஆண்டுகளும் ஆண் சிங்கங்கள் 12 ஆண்டுகளும் ஆயுட் காலத்தை

சராசரியாகக் கொண்டுள்ளன. சிங்கங்கள் கூட்டமாக வாழும். ஒரு கூட்டத்தில் ஒரு வயதான ஆண் சிங்கமும் 5 -6 வயது வந்த பெண் சிங்கங்களும் இவற்றின் குட்டிகளும் காணப்படும். ஆண் சிங்கங்கள் தனது கூட்டத்திற்கான எல்லையினை மலம் சிறுநீர் என்பனவற்றை இட்டும் மரங்களில் தனது கூரிய நகங்களினால் அடையாளமிட்டும் கர்ச்சித்தும் வரையறை செய்து ஏனைய சிங்கங்களுக்கும் பெரிய வகை ஊன் உண்ணிகளுக்கும் தெரியப்படுத்தும் வலிமையுள்ள வரை ஆண் சிங்கம் தன் கூட்டத்தின் தலைவனாக இருக்க முடியும். கூட்டத்தில் உள்ள வலிமையான வேறு ஒரு ஆண் சிங்கம் தலைமை சிங்கத்துடன் சண்டையிட்டு வெற்றி பெற்றால் அச் சிங்கமே இக் கூட்டத்திற்கு புதிய தலைவனாகும். அதேவேளை, தோற்கடிக்கப்பட்ட சிங்கம் கூட்டத்திலிருந்து விரட்டி அடிக்கப்படும். இவ்வாறு விரட்டி அடிக்கப்பட்ட சிங்கம் வயதான காரணத்தினாலும் பல், நகங்கள் என்பன கூர்மை இழந்த காரணத்தினாலும் வேட்டையாடி உண்ண முடியாமல் மெலிவடையவும் இறக்கவும் நேரிடும்.

மேலும் சண்டையின் போதும் சில சிங்கங்கள் இறந்து விடுகின்றன. இவையே பெண் சிங்கங்களை விட ஆண் சிங்கங்களின் ஆயுட்காலம் குறைவடையக் காரணமாகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கூட்டத்தில் இருக்கும் சிங்கங்கள் மட்டுமன்றி ஏற்கனவே இக் கூட்டத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட சிங்களும் இக் கூட்டத்தினுள் நுழைய பிரயத்தனப்படும். இவ்வாறான சிங்கங்களும் தலைமை சிங்கத்துடன் போரிட்டு அதனை விரட்டிவிட்டோ அல்லது காயப்படுத்தி கொன்றுவிட்டோ தலைவனாகி விடும். இச் சிங்கம் கூட்டத்தில் உள்ள பெண் சிங்கங்களுடன் இணை சேர்வதற்காக முயற்சிக்கும் போது அதன் முன்னைய குட்டிகள் தடையாகுமிடத்து அவற்றை கொன்றுவிடும். இது சிங்கத்தின் தொகை குறைவடைய ஒரு காரணமாக அமைகின்றது. 1990 ஆம் ஆண்டளவில் 100000 ஆக காணப்பட்ட சிங்கங்கள் இன்று 16000 - 30000 வரையே உள்ளன. இவ்வாறு இவற்றின் எண்ணிக்கை வீழ்ச்சியடைய கால நிலை மாற்றங்கள், புகலிட அழிவுகள், உணவு என்பனவும் காரணமாக அமைக்கின்றன.

சிங்கங்கள் ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிலே காணப்படுகின்றன. இவை அடர்ந்த காடுகளில் வாழ விரும்புவதில்லை. அடர்த்தி குறைந்த இலையுதிர் காடுகளிலே வாழ விரும்புகின்றன. பெண் சிங்கங்களே அதிகம் வேட்டையாடும் திறன் கொண்டவை இவை மான், பன்றி போன்ற விலங்குகளை விரும்பி வேட்டையாடி உண்கின்றன. வேட்டையாடிய விலங்குகளின் சதை பகுதியை உண்டு விட்டு ஏனைய எலும்புகளையும் அதனுடன் சேர்ந்த தசைகளையும் அப்படியே விட்டுவிட்டுச் சென்று விடும். இவற்றை காட்டில் உள்ள கழுதைப் புலி, ஓநாய், நரி போன்றன உண்ணும் நன்கு உண்ட சிங்கம் பல நாட்கள் வேட்டையாடாது.

பெண் சிங்கங்கள் தமது குட்டிகளுக்கும் உணவு கொடுக்கும். அத்துடன் அவற்றிற்கு வேட்டையாடவும் கற்றுக்கொடுக்கின்றது. உணவு கிடைக்காதவிடத்து பல மைல்களுக்கு அப்பால் சென்றும் தாய் சிங்கங்கள் வேட்டையாடுகின்றன. இவை சென்று வரும் காலம் சிங்கக் குட்டிகளுக்கு ஏனைய விலங்குகளிடம் இருந்த பாதுகாப்பு இன்மையே காணப்படும்.

## மலேரியா

மலேரியா காய்ச்சல் ஆனது பிளாஸ்மோடியம் (Plasmodium) எனப்படும் ஒரு வகை

ஒட்டுண்ணியால் ஏற்படுத்தப்படுகின்றது. இவ் ஒட்டுண்ணியினை அனோ பிலிஸ் (Ano pheles) எனும் நுளம்பு பரப்புகின்றது.

அனோ பிலிஸ் நுளம்பு ஓய்வு நிலையின் போது தலை, நெஞ்சு, வயிற்றுப் பாகம் என்பன 45 பாகை இல் உடலுடன் ஒரே நேர் கோட்டில் காணப்படும். இந் நுளம்புகள் மனிதர்களை இரவு வேளைகளிலும் பிற்பகல் வேளைகளிலும் கடிக்கின்றன.

### பிளாஸ்மோடியம் லைவக்ஸ் மலேரியா நோயின் அறிகுறிகள்

1. காய்ச்சல் ஒவ்வொரு 48 மணித்தியாலத்திலும் உச்ச நிலையினை அடையும். முதலாவதாக குளிர் நிலை 30 நிமிடம் முதல் ஒரு மணி நேரம்வரை நீடிக்கும், தலை வலி, வயிற்றுப்பிரட்டு, வாந்தி, நாரிநோ, குளிருடன் கூடிய நடுக்கம் என்பன காணப்படும்.
2. இரண்டாவதாக சூடான நிலை 4 மணித்தியாலங்கள் நீடிக்கும்.
3. காய்ச்சல் விரைவாக உச்ச நிலையினை அடையும்
4. மூன்றாது நிலையில் அதிக அளவு வியர்வை உருவாகும்.
5. உடல் வெப்ப நிலை சாதாரண நிலையினை அடையும்

### பிளாஸ்மோடியம் பல்சிபாரம் மலேரியா (மூளை மலேரியா) நோயின் அறிகுறிகள்

1. தலைவலி, இடுப்புவலி, வாந்தி என்பன அதிக அளவில் இருக்கும்.
2. காய்ச்சல் ஒழுங்கற்று அதிஉயர் வெப்பநிலையை அடையும்.
3. காய்ச்சல் விட்டு விட்டு வருவதுடன் ஒருநாளில்சிலமணித்தியாலயங்கள் வரை நீடிக்கும் குளிர், வெப்பம் வியர்க்கும் நிலைகளைத் தெளிவாக வேறுபடுத்த முடியாது.
4. மூளை மலேரியா கடுமையாகுமிடத்து மயக்கம், வலிப்பு, ஈரல் செயலிழப்பு, குருதிச் சுற்றோட்ட நிறுத்தம், கடுமையான காய்ச்சல், சிறுநீரகச் செயலிழப்பு என்பன ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இந் நோய் வராது தடுக்க வேண்டுமாயின் முதலில் குறிப்பிட்ட நுளம்பு விருத்தியாவதை தடுத்தல் வேண்டும். அத்துடன் நுளம்பு கடியாதவாறு உங்களைப் பாதுகாத்துக்கொள்ளல் அவசியம் நோயாளி உள்ள இடத்தில் வசிக்க நேரிட்டால் மருத்துவ மனை சென்று இரத்தப் பரிசோதனை செய்வது சிறப்புடையது. மலேரியா பரவும் இடங்களுக்குச் செல்பவர்கள் மருத்துவரின் ஆலோசனைப் படி முற்காப்பு மருந்து எடுப்பது பயனுடையதாகும். நோய் ஏற்பட்டால் சிபார்சு செய்யப்படும் மருந்துகளை மருத்துவரின் ஆலோசனைப் படி பூரணமாக எடுக்க வேண்டும். கற்ப காலத்தில் ஏற்படும் மலேரியா தாய்க்கு மட்டுமன்றி கர்ப்பத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் எனவே இந்நோய் ஏற்பட்டால் உரிய முறையில் முழுமையாக குணப்படுத்த வேண்டும். மேலும் நோய் ஏற்படாதவாறு இயன்ற வரை ஒவ்வொருவரும் நம்மை பாதுகாத்து கொள்ள வேண்டும்.

## இலவு

இலவு மரத்தினை Silk Cotton tree என்னும் Kopok என்றும் ஆங்கிலத்தில் அழைப்பர். தாவரவியலாளர்கள் சீபாபென்ரான்றா (Ceiba pentantra) என இரு சொற் பெயரீட்டு

முறையில் அழைப்பர். இலவு பொம்பகேசியே (Bombacaceae) எனும் தாவர குடும்பத்தைச் சேர்ந்தது

இம்மரம் ஏறத்தாழ 60m வரை உயரமாக வளரக் கூடியது. தண்டு உருளை வடிவு டையது. அழுத்தமான மரப்பட்டையின் சுவரில் 1-1.5cm நீளமுடைய முட்கள் காணப்படும். சிறைவடிவான 5-9 சிற்றிலைகள் இணைந்ததாக ஒரு இலை காணப்படும்.

இலவின் பூர்வீகம் அமெரிக்காவின் அயன மண்டலப் பிரதேசம் ஆகும். இம் மரத்தின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவுக்கும் பின்னர் கிழக்கு ஆபிரிக்கா, ஆசியா போன்ற நாடுகளுக்கும் மனிதர்களால் பரவலடையச் செய்யப்பட்டு இன்று உலகம் முழுவதும் இம் மரம் காணப்படுகின்றது.

இலவங்காய் முற்றியதும் அதனைப் பறித்து சாக்கில் இட்டு வெயிலில் வைப்பர். அது சாக்கினுள்ளேயே வெடித்து பஞ்சாகும். இதனை தலையணை செய்யப் பயன்படுத்துவர். இலவு மரத்தின் பஞ்சினை பயன்படுத்தி மெத்தைகளும் தயாரிக்கின்றர். இலவம் பஞ்சில் செலுலோசு 43 % லிக்னின் 13-15 % கெமி செலுலோசு 32 % சாம்பல் 1% அடங்கியுள்ளது.

இலவு மரம் மரப்பெட்டிகள், இலகு எடையுள்ள கொள்கலன்கள், வீட்டு பொருட்கள், இசைக் கருவிகள், இலகு எடையுள்ள அலுவலக தளபாடங்கள் சிற்பங்கள் என்பவற்றை அமைக்கப் பயன்படுத்துகின்றனர். மேலும் மிதவைகள், வள்ளங்கள், உருவ மாதிரிகள் என்பவற்றை தயாரிக்கவும் இம் மரத்தை பயன்படுத்துகின்றனர்.

இலவு மரமானது கடதாசி உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இம்மரத் தூள் சவர்க்கார உற்பத்திக்குப் பயன்படுகின்றது. இலவு மரத்தினுடைய இலை கால்நடைகளுக்கு தீவனமாகும். சமைக்கப்பட்ட இலைகள், பூக்கள், இளங்காய்கள் என்பன உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இம் மரப் பூவில் இருந்து நல்ல தேனினை தேனீக்கள் பெற்றுக்கொள்கின்றன.

இலவு விதையில் இருந்து பெறப்படும் எண்ணை சவர்க்கார உற்பத்திக்கும் மருத்துவ பொருட்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆபிரிக்கர்கள் தமது சுதேச வைத்தியத்தில் இம்மர வேரினை தொழு நோயினை குணப்படுத்தப் பயன்படுத்துகின்றனர். மேலும் இவர்கள் மரப்பட்டையில் இருந்து பெறப்படும் சீவல்களை உயர் குருதி அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படுத்துகின்றர். குடற்புழுக்களை கட்டுப்படுத்தபூக்களைபவுடராக்கிபயன்படுத்துகின்றனர். விதையில் இருந்து பெறப்படும் எண்ணை கால் வாதம், முடக்கு வாதம், மூட்டு வாதம்என்பவற்றிக்குபயன்படுத்துகின்றனர்.

இலவு மரத்தினை விதைகள் மூலமாகவும் வெட்டுத் துண்டங்கள் மூலமாகவும் இனப் பெருக்கம் செய்யலாம். உடனடியாகப் பெற்ற விதைகள் 90 -100% மானவை 3-5 நாட்களில் முளைக்கத் தொடங்கும். இம்மரத்தினை 4.5 - 5m இடைவெளியில் நடுகை செய்யலாம். இம்மரத்தினை வளர்ப்பதற்கு பெரிதாக கவனிப்பு தேவையில்லை. மழைகாலங்களை அண்டி நடுகை செய்வது சிறந்தது. சுய வருவாயை தரவல்ல மரம் என்பதால் இதனை நடவு செய்து வருவாயைப் பெற்றுக் கொள்வதுடன் பசுமையினையும் பேணலாம்.

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

| போட்டி நடைபெற்ற நாடு | வெற்றிபெற்ற நாடு | ஆண்டு |
|---|---|---|
| 01. உருகுவே | உருகுவே | 1930 |
| 02. இத்தாலி | இத்தாலி | 1934 |
| 03. பிரான்ஸ் | இத்தாலி | 1938 |
| [1942, 1946 இரண்டாம் உலகப்போர் காரணமாகப் போட்டிகள் நடைபெறவில்லை] | | |
| 04. பிறேஸில் | உருகுவே | 1950 |
| 05.சுவிற்சர்லாந்து | மே.ஜேர்மனி | 1954 |
| 06. சுவீடன் | பிரேசில் | 1958 |
| 07. சிலி | பிரேசில் | 1962 |
| 08. இங்கிலாந்து | இங்கிலாந்து | 1966 |
| 09. மெக்ஸிக்கோ | பிரேசில் | 1970 |
| 10.மே. ஜேர்மனி | மே.ஜேர்மனி | 1974 |
| 11. ஆர்ஜன்ரீனா | ஆர்ஜன்ரீனா | 1978 |
| 12. ஸ்பெயின் | இத்தாலி | 1982 |
| 13. மெக்ஸிக்கோ | ஆர்ஜன்ரீனா | 1986 |
| 14. இத்தாலி | மே.ஜேர்மனி | 1990 |
| 15. அமெரிக்கா | பிரேஸில் | 1994 |
| 16. பிரான்ஸ் | பிரான்ஸ் | 1998 |
| 17.தென்கொரியா, ஜப்பான் | பிரேசில் | 2002 |
| 18. ஜேர்மனி | இத்தாலி | 2006 |
| 19.தென்னாபிரிக்கா | ஜேர்மனி | 2010 |
| 20.பிரேசில் | ஜேர்மனி | 2014 |

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறுகின்றன. FIFA எனப்படும் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் இப்போட்டிகளை ஒழுங்கமைத்து நடத்துகின்றது.

## இந்தியா (India)

1. தலைநகரம் - புதுடெல்லி
2. நாணயம் - ரூபா
3. தேசியப் பறவை - ஆண் மயில்
4. தேசிய விலங்கு - புலி
5. தேசிய விளையாட்டு - ஹொக்கி
6. தேசிய மலர் - தாமரை
7. தேசிய தினம் - ஒகஸ்ட் 15
8. சுதந்திரம் - 1947
9. குடியரசுத் தினம் - ஜனவரி 26
10. குடியரசு - 1950
11. பரப்பளவு - 3287263 (கி.மீ)
    ( உலகில் 7 ஆவது பெரிய நாடு)
12. சனத்தொகை - 1 210 193 422
    (உலக சனத்தொகையில் இரண்டாமிடம்) (2011 ஆம் ஆண்டு மதிப்பீடு)

**நாடாளுமன்றம்**

I. மாநிலங்களின் அவை (Rajya Shaba)

மாநிலங்கள் அவையினை ராஜ்யசபாஎன அழைப்பர். இச் சபை 250 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களுள் 238 உறுப்பினர்கள் வெவ்வெறு மாநிலங்களில் இருந்தும் யூனி யன் பிரதேசங்களில் இருந்தும் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாநிலங்க ளினதும் மக்கள் தொகைக்கு ஏற்ப இவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இலக்கியம், விஞ்ஞானம், கலை மற்றும் சமூக சேவைகள் போன்ற துறைகளில் சிறந்த அறிவு அல்லது அனுவபம் கொண்டவர்களில் இருந்து மிகுதி 12 உறுப்பினர்களை ஜனாதிபதி நியமனம் செய்கின்றார்.

II.மக்களவை (LOK SABA)

மக்களவை 552 க்கு மேற்படாத மொத்த உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களுள் 530 உறுப்பினர்கள் மாநிலங்களில் இருந்து மக்களின் நேரடி வாக்கின் மூலம் தெரிவு செய்யப்படுவர். ஏனைய 20 உறுப்பினர்களும் யூனியன் பிரதேசங்களில் இருந்து மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள். மற்றும் ஆங்கி லேய - இந்திய சமூகத்தவர்களுக்கு மக்கள வையில் போதிய அளவு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என ஜனாதிபதி கருதினால் அச் சகமூகத்தில் இருந்து 2 பேரை ஜனாதிபதி நியமிப்பார். சுதந்திர இந்தியாவின் முதலா வது மக்கவை 1952 இல் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டது.

முதல் பிரதமர் - ஜவஹர்லால் நேரு - 1947 - 1964

தற்போதைய பிரதமர் - நரேந்திர மோடி

முதல் ஜனாதிபதி -டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் - 1950 - 1962

தற்போதைய ஜனாதிபதி - பிரணாப் முகர்ஜி

தேசிய கீதம் - 'ஜன கன மன' '

இயற்றியவர் - இரவிந்திர நாத் தா கூர்,

மொழி. வங்காள மொழி

தமிழில் "மக்கள் பெருங் கூட்டத்தின் மனதில் ஆட்சி செய்பவன் நீ" (தேசிய கீத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் முதல் வரி)

ஆட்சி மொழி - ஹிந்தி, ஆங்கிலம்

இந்தியா எனும் பெயர் சிந்துநதி எனும் பெயரில் இருந்து பிறந்தது. இந்தியப் பெரு நிலம், தெற்கே இந்திய பெருங்கடல் மேற்கே அரபிக்கடல் கிழக்கே வங்காள விரிகுடா என்பனவற்றையும் மேற்கே பாகிஸ்தானை யும் வடக்கே பூட்டன், மக்கள் சீன குடியரசு, நேபாளம் ஆகிய நாடுகளையும் கிழக்கே பங்களாதேஷ், மியன்மார்ஆகிய நாடுகளை யும் எல்லைகளாகக் கொண்டது.

கூட்டாட்சிக் குடியரசு 29 மாநிலங்களும், ஆறு ஒன்றியப பகுதிகளும் ஒரு தேசிய தலைநகரையும் கொண்டது. இந்தியாவில் ஏறத்தாள 600 மாவட்டங்கள் உள்ளன.

இந்திய அரசியல் அமைப்பிலே அல்லது இந்திய சட்டங்களிலே தேசிய மொழியாக எந்த மொழியும் விபரிக்கப்பட வில்லை. அதிக மக்களால் பேசப்படும் இந்தி மொழி ஆட்சி மொழியாகவும் ஆங்கிலம் உப ஆட்சி மொழி யாகவும் உள்ளது.

சமயம் (2011 கனிப்பு)

இந்து - 80.5 %

இஸ்லாம் - 13.4%

கிறிஸ்தவம் - 2.3%

சீக்கியம் - 1.9 %

பௌத்தம் - 0.8 %

ஜெனம் - 0.5 %

பிற - 0.6%

## இலங்கை

ஜனவரி 08 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேன ஜனவரி 09 2015 இல் இலங்கையின் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டார்.

இலங்கையின் 15 ஆவது பாராளுமன்றத் தேர்தல் ஒகஸ்ட் 17 2015 இல் நடைபெற்றது. இதில் கட்சிகள் பெற்ற ஆசன விபரம்

| கட்சி | தொகுதி | தேசியப்பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 93 | 13 | 106 |
| ஐ.ம.சு.மு. | 83 | 12 | 95 |
| த.தே.கூ | 14 | 02 | 16 |
| ஜே.வி.பி. | 04 | 02 | 06 |
| ஈ.ம.ஜ.க. | 01 | 00 | 01 |
| ஸ்ரீ.மு.க. | 01 | 00 | 01 |
| மொத்தம் | 196 | 29 | 225 |

தற்போது இலங்கையின் பிரதமராக ரணில் விக்கிரசிங்க (ஐ.தே.க.) உள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் - இரா. சம்பந்தன் (த.தே.கூ)

சபாநாயகர் - கரு ஜெயசூரிய

பிரதி சபாநாயகர் - திலங்க சமதிபால

குழுக்களின் பிரதி தலைவர் - செல்வம் அடைக்கலநாதன்

அவைத் தலைவர் - லஷ்மன் கிரியெல்ல

இலங்கையில் தற்போது தேசிய அரசு பதவி வகிக்கின்து. இதில் உள்ள கட்சிகள் ஐ.தே.கவும் இதடனுடன் இணைந்து போட்டியிட்ட சிறுபாண்மைக் கட்சிகளும் ஸ்ரீ.சு.க.

## பூமியைப்போல் பல்வேறு கிரகங்கள்

பூமியைப் போல் மனிதர்கள் வாழக் கூடிய வேறு கிரங்கள் உள்ளனவா? என விஞ்ஞானிகள் பல காலமாக ஆய்வுகளை மேற்கொண்டு வந்துள்ளனர். சர்வதேச ரீதியில் பூமியைப் போல் உயிர் வாழக்கூடிய புதிய கிரகங்கள் உண்டா? அவற்றில் வேற்றுக் கிரகவாசிகள் வசிக்கின்றனரா? என்ற வினாக்களுக்கு விடை தேடும் முகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதற்கு விடை கிடைத்தாற்போல் அண்மையில் பூமியைப் போல் மூன்று கிரகங்கள் சூரிய மண்டலத்திற்கு வெளியே உள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினின் உள்ள ஒரு தீவில் அமைக்கப்பட்டுள்ள ஹாரிபஸ் என்ற அதி நவீன தொலைநோக்கி மூலம் பூமியில் இருந்து 21 ஒளி ஆண்டுகள் தொலைவில் பூமியைப் போன்ற மூன்று புதிய கிரகங்கள் ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி வருவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2009 ஆம் ஆண்டு மாசி மாதம் சூரிய மண்டலத்துக்கு வெளியே பூமியை போன்ற வேறு கிரகங்கள் இருக்கின்றனவா? என ஆய்வு நடாத்துவதற்காக சக்தி வாய்ந்த கெப்ளர் தொலை நோக்கி விண்கலத்தை நாசா விண்ணில் ஏவியது.

இந்த விண்கலம் தற்போது பூமியைப் போன்ற புதிய கோள் ஒன்றினைக் கண்டறிந்து உள்ளதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த புதிய கோளிற்கு கெப்ளர் 452 பி என விஞ்ஞானிகள் பெயரிட்டு உள்ளனர்.

இப்புதிய கோள் சூரிய குடும்பத்திற்கு வெளியே பூமியில் இருந்து சுமார் 1400 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளதாக கூறப்படுகின்றது.

## எல்லாளன்

கி.மு. 205 தொடக்கம் கி.மு. 161 வரை அனுராதபுரத்தை தலைநகராக் கொண்டு இலங்கையினை ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளன் ஆவான். இதனை இலங்கை வரலாற்று ஆவணமான மகா வம்சம் பதிவு செய்து உள்ளது. மேலும் மகாவம்சம் இவனது ஆட்சிக் காலம் நீதியானதும் சிறப்பு மிகுந்ததும் எனக் குறிப்பிடுக்கின்றது.

எல்லாளன் சோழ நாட்டைச் சேர்ந்தவர். இவர் தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து இலங்கைக்கு வந்தவர் என வம்சம் கூறுகின்றது. சிலர் எல்லாளன் தற்போது பூநகரி என அழைக்கப்படும் உத்தர தேசத்தை சேர்ந்தவன் எனவும் கூறுவர் எனினும் இது குறித்து தெளிவான முடிவு எடுப்பதற்கு இது வரை சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

மகாவம்சம் எல்லாளன் பகைவர்களுக்கும் நண்பர்களுக்கும் சமநீதி வழங்கியதாகக் கூறுகின்றது. மேலும் இந் நூலில் எல்லாளனது ஆட்சி மனுநிதிச் சோழனது கதைகளோடு இணைத்து விவரிக்கப்பட்டு உள்ளது. எல்லாளனின் படுக்கை அறையில் ஒரு ஆராய்ச்சி மணி கட்டப்பட்டு இருந்தது என்றும் நீதி வேண்டுவோர் எந்த நேரமும் கோட்டை வாயிலில் தொங்கும் கயிற்றினை இழுத்து இம் மணியினை ஒலிக்கச் செய்தால் உடனே மன்னன் அங்குவந்து விசாரித்து தீர்பளிப்பான் எனக் கூறப்பட்டுள்ளது.

எல்லாளனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். இதில் இவனது மகன் ஒரு நாள் தேரில் திசா வாவியினை நோக்கி சென்ற போது வழியில் படுத்திருந்த கன்றின் மீது தேர்ச் சில் ஏறியதால் கன்று இறந்து விட்டது. சோகமடைந்த தாய்ப் பசு எல்லாளனின் ஆராய்ச்சி மணியை அடித்து நீதி கேட்ட போது தன் மகனையும் இதேபோல் தேர்ச் சில்லில் இட்டு கொன்று தீர்ப்பளித்தான் என கூறப்படுகிறது. இவ்வாறான ஒரு சம்பவம் ஏற்கனவே மனுநீதி சோழனது வரலாற்றில் இடம் பெற்றிருந்தமை யாவரும் அறிந்ததே.

அடுத்து பாம்பொன்றுக்கு இரையான தனது குஞ்சுக்காக தாய் பறவை ஆராய்ச்சி மணியை அடித்தபோது அப் பாம்பினைப் பிடித்து அதன் வயிற்றைக் கீறி குஞ்சை வெளியே எடுத்ததுடன் பின் பாம்பை மரத்தில் தொங்கவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இன்னொரு சம்பவத்தில் ஒரு வயோதிப மாது வெயிலில் அரிசியை காயப்போட்டிருந்த போது பருவம் தப்பிப் பொழிந்த மழையால்

அரிசி முழுதும் பழுதடைந்த போது அவள் எல்லாளனிடம் முறையிட அவன் வருணனிடம் வாரத்துக்கு ஒரு தடவை இரவில் மட்டும் மழை பொழிய வேண்டுதல் விடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பல சம்பவங்கள் மூலமாக எல்லாளனது நீதியின் சிறப்பு மகா வம்சம் மூலம் விவரிக்கப்பட்டுள்ளது. எல்லாளன் இந்து மதத்தினன் என்றும் இவன் பௌத்த மதத்தினையும் ஆதரித்தான் எனவும் கூறப் படுகின்றது.

எல்லாளனது ஆராட்சிக் காலம் மிகவும் சிறப்புடையதாகவும் நீதி நிறைந்ததாகவும் காணப்பட்டதுடன் மக்கள் நிம்மதியாக வாழ்ந்த ஒரு காலமாகவும் இது விளங்கியது.

காமினி அப்பன் என்பவனை பிற்காலத் தில் துட்ட காமினி என அழைத்தனர். இவன் தமிழர்களுக்கு எதிரானவனாக உருவாக்கப் பட்டான். இவன் தன் தந்தையின் மறைவிற்கு பின் பெரும் படையுடன் எல்லாளன் மீது படை எடுத்தான். எனினும் துட்ட கைமுனுவால் எல்லாளனின் போர் தந்திரங்களை வெற்றி கொள்ள முடியவில்லை. இதனால் எல்லாள னை தனிச் சமருக்கு அழைத்து சதித் திட்டத்தின் மூலம் எல்லாளனை கொலை செய்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

" எஃகிய பஞ்சினைப் போல தமிழ் எல்லாள மன்னனின் இருதயம் போல' ' என இலங்கை வளத்தைப் பாடிய சோமசுந் தரப் புலவர் எல்லாளனது இதயம் தூய்மை யானது என்கிறார். இவ்வாறு தூய வெண் மையான இதயம் கொடை எல்லாள மன்ன னது நீதி தவறாத நேர்மையான ஆட்சி என் பன துட்ட கைமுனுவின் சதித்திட்டத்திற்கு இரை யாகியது என்பது வரலாறு.

இந்த வரலாறு கி.மு. என்பதனால் இன் றைய ஆய்வாளர்கள் ஒரு தலைப் பட்சமாக முழு வரலாற்றினையும் தருவதில் சிக்கல் களை எதிர் கொள்வதை காணமுடிகின்றது.

## உலக தொல்லியல் பாரம்பரிய சின்னம்

தஞ்சையிலுள்ள பெருவுடையார் கோயில் என்று அழைக்கப்படும் தஞ்சைப் பெரிய கோயிலானது இந்தியாவின் பாரம்பரியத் திற்கும் ஈடு இணையற்ற உருவாக்கத் திற னுக்கும் எடுத்துக்காட்டாக திகழ்கின்றது.

சோழப்பேரரசர் இராஜராஜனால் ஓராயி ரம் ஆண்டுகளுக்குமுன்பு கட்டப்பட்ட பிரமா ண்டமான இத்திருக்கோயில் ஐ.நா.வின் யி னெஸ்கோ அமைப்பால் உலக பாரம்பரிய சின் னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அற்புத சின்னமானது இந்திய தொல்லியல்துறை யால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவரு கிறது.

சீரிய சிவ பக்தராகயிருந்த பேரரசர் இரா ஜராஜன், இந்த மாபெரும்திருக்கோயிலை 1003ஆம் ஆண்டு கட்டத் துவங்கி 1009 ஆம் ஆண்டுமுடித்துள்ளார். பெருவுடையார் எனு ம் பெயரில் இக்கோயிலில்குடிகொண்டிருக் கும் சிவபெருமானை வணங்கிய இராஜரா ஜன், இக்கோயிலின் கருவறையின் மீது கட் டிய மிகப்பெரிய விமானமேஇக்கோயிலின் பெரும் சிறப்பாக போற்றப்படுகிறது.

சாதாரணமாக கோயில்களின் நுழைவா யிலின் மீது கட்டப்பட்டுள்ளஇராஜகோபுரமே பெரிதாக இருக்கும். கோயிலின் கருவறை யின் மீதுகட்டப்பட்டுள்ள விமானம் சிறியதா, இருக்கும்.இராஜகோபுரத்தின் மேல் 5 முதல் 11 வரை கும்பக்கலசங்கள் இருக்கும். "கோயி லிற்கு வந்துவணங்க வாய்ப்பு பெறாத பக்தர்

கள் தூரத்திலிருந்தே - இராஜகோபுரத்தின் மேலுள்ள கலசங்களைப் பார்த்துவணங்கி னால் அது அக்கோயிலில் குடிகொண்டிருக்ம் தெய்வத்தை வணங்கியதாக அர்த்தமாகும்” என்பது ஆன்மீகவிளக்கமாகும்.

ஆனால் தஞ்சை பெரிய கோயிலைப் பொறுத்தவரையில் நுழைவாயிலில் உள்ள இரண்டு கோபுரங்களும் ஆன்மீக, கலை வள மிக்கதாக இருந்தாலும்உயரத்தில் சிறியதாக வே உள்ளன. மாறாக, கோயிலின் கருவறை யின் மீது

கட்டப்பட்டுள்ள விமானம் ஒரே ஒரு கலசத்தை தாங்கி - மிகப் பெரியதாக உள்ளது. தரையிலி ருந்து 216அடி உயரமுடைய விமானத்தின் மீது 12 அடிஉயரமுடைய கும்பக் கலசம் நிறுத்தப் பட்டுள்ளது. இந்தியாவிலேயே மிக உயர மான விமானம்இதுதான்.

இதில் அதிசயம் என்னவென்றால் இவ்வ ளவு பெரிய கட்டுமானம் அடித்தளமின்றி எழுப் பப்பட்டுள்ளது. அடித்தளமின்றி 1,000 ஆண்டு களாக நின்றுகொண்டிருக்கும் இக் கோயில் ஒரு அற்புதமல்லவா.

இக்கோயிலிற்குள் கருவறையில் 12 அடிசிவலிங்கம் உள்ளது. சிவலிங்கத்தை சுற்றிக்கட்டப்பட்டுள்ள கருவறைச் சுவரைச் சுற்றி, 6 அடி இடைவெளி விட்டுமற்றொரு வலி மையான சுவர் கட்டப்பட்டுள்ளது. அவைக ளின் மீதுதான் 14அடுக்குகளைக் கொண்ட இந்த மாபெரும் விமானம் கட்டப்பட்டுள்ளது.

சதுர வடிவில், கற்களைஅடுக்கி எழுப்பப் பட்டுள்ள இந்த 14 அடுக்குகளின் நடுப்பகுதி வெற்றிடமாகவே உள்ளதுதான் இந்தக் கட்ட டக் கலையின் மற்றொரு அதிசயம். 14வது அடுக்கின் மீது 88 டன் எடையுடைய - 12 அடிஉ யர கும்பக் கலசத்தைவைத்திருக்கிறார்கள். இது தனது எடையின் வலிமையால் அதன் கீழுள்ள மொத்த கட்டமைப்பையும் உறுதி குலையாமல் அழுத்தி நிற்கச் செய்கிறது.

ஆகம விதி, சிற்ப சாத்திர நுணுக்கங்கள், புராதன கணித முறை ஆகியவற்றை பயன் படுத்தி ஒவ்வொரு கல்லும் அடித்தளத்திலி ருந்து விமானம் உச்சி வரை எடைக்கு எடை, நாற் புறத்திலும் சம அளவிலான பாரம் கொடுக் கப்பட்டு ஒரு பிரமிட்டைப் போல் கட்டி எழுப்பி யுள்ளனர் நம் தமிழர்கள். இப்புராதன கட்டுமா னத்தின் நுணுக்கங்களை இன்றளவிலும் பொறி யியலாளர்களால் முழுமையாகப் புரிந்துக் கொள்ள இயலவில்லை.

இந்த 88 தொன் கலசத்தை தற்போது உலகத்தில் உள்ள வசதிகள் கொண்டு இத்தனை அடி உயரத்திற்கு உயர்த்த முடியாது என்று அறிவியல் வல்லுனர்கள் கருதுகின் றனர்.அந்த நாட்களில் இது எப்படி சாத்திய மானது என அறிவியல் உலகமே தலையைப் பிய்த்துக்கொண்டு இருக்கிறது.

இத்திருக்கோயில் விமானத்தை அமைப் பதற்கு விமானத் தளத்தை நோக்கி ஏறத்தாள இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்து ஒரு செங்குத்தான பாலம் ஒன்றைக் கட்டி அதில் யானைகளைக் கொண்டு பெரும் பெரும் கற்களை ஏற்றிச் சென்றதாக ஆராய்ச் சியாளர்கள் கூறுகின்றனர். பாலம் தொடங் கப்பட்ட இடத்தினையும் அவர்கள் கண்டுபிடித் துள்ளனர் என்றும் தகவல்கள் கிடைக்கின் றன.

# ஊன்று கோல்

வரணியில் இருக்கும் அவள் அம்மாவுக்கு பல முறை போன் அடித்துக் களைத்துப் போனாள் நிலவினி. அம்மாவிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

மனம் படபடக்க அம்மாவின் வீட்டுக்கு அயலில் இருக்கும் ரேணுகா அன்ரிக்கும் போன் அடித்தாள் அவாவிடம் இருந்தும் ஒரு பதிலும் இல்லை. மழைவேற, சிக்னல் கட்டாகிக்கொண்டிருந்தது.

'என்ன அம்மா வாறாவா? இல்லையா? " மிரட்டுவது போன்று கேட்டான் சாந்தன் சொல்லப்பயந்து திக்கு முக்காடி நின்றாள் நிலா.

அவளிடம் இருந்து எந்த பதிலுக்கும் காத்திருக்காதவனாய் சந்தையில் இருந்து கொண்டு வந்த மரக்கறிகளை குசினிக்குள் அதற்குரிய இடத்தில் ஒவ்வொன்றாக வைத்து விட்டு இன்றைய தேவைக்கானதை மட்டும் தரம் பிரித்து அளவாக மேசையில் எடுத்து வைத்தான். அடுப்பில் இருந்த சோற்றை துலாவி விட்டு சோற்றை தணலில் உவிய விட்டான்.

மீண்டும் அவள் போனை நோண்டியபடி சினம் கொண்டாள். என்ன? இவ்வளவு நேரமாய் பேஸ்புக்கோ பார்க்கிறாய்?.... உனக்குச் சொன்ன வேலை என்ன? செய்கிற வேலை என்ன?... நான் படுறபாடு உனக்கு என்ன தெரியும்?...பிள்ளையும் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிட்டான். அவனையும் வைச்சுக்கொண்டு நான் என்ன செய்வான் என்று சொல்லு பாப்பம்?... வேலைக்கு போகிறதா? வீட்டைப் பார்க்கிறதா? உன்னைப் பார்க்கிறதா?... பிள்ளையைப் பார்க்கிறதா?... உனக்கு ஏதாவது யோசனை இருக்கா?.... அவளைத் திட்டியபடி கிணற்றடிப் பக்கம் போனான்.

வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் 'மில்" லில் வேலை செய்து வருவதுடன் நேர்மையாக வேலை செய்யும் இடமாகவும் இருப்பதனால் பலர் தேடித்தேடி அந்த மில்லுக்கு வருவதுண்டு. அதனால் சாந்தனும் எந்த இடையூறும் இன்றி இடையிட்ட நேரங்களில் வீட்டுக்கு வந்து செல்வதும் உண்டு. அந்த நேரங்களில் தான் அவசரஅவசரமாக வீடு துப்புரவு செய்வதும் உடுப்புத் தோய்ப்பதும் பிள்ளைக்கு தேவையானவற்றை செய்யவும் சமையல் என்றும் எல்லாமுமாகவும் இருந்தான் சாந்தன்.

'அம்மா அப்படி என்னதான் பெரிய வேலையாய் இருக்கிறா?... தலையைப் பித்துக் கொண்டு எங் கயாவது போய் விழுந்து சாக வேண்டும். போல இருக்கு. இருக்கும் வரைக்கும் தான் எல் லோரும் குடும்பம் குட்டி என்று இல்லை என் றால் ஏனென்டும் கேட்காயினம்.

'இங்க வா சாந்தன்.... வாழ வேண்டிய வயசில நீ இப்படிக் கிடந்து கஷ்டப்பட வேண்டாம். நல்ல காலம் பிள்ளையும் ஆம்பிளைப் பிள்ளையாய் போச்சு. நீ விட்டுட்டு கொழும்பு போய் வா. அண்ணாவைச் சொல்லி வெளியில ஒரு கலியாணத்தைப் பார்க்கலாம் விளங்குதா?.....

சிறுகதை

அம்மா உனக்கு எப்பவும் நல்லதுதான் சொல்லுவன்....

தாயின் வார்த்தைகளால் சாந்தன் மனம் உடைந்து போனான். அவனது அம்மாவின் கதைகளை தட்டிக் கழிக்க முடியாது என்பதும் அவனுக்குத் தெரியும்.

'அ.....ம்.....மா..... எப்படி அம்...மா.. காதலிச்சு கலியாணம் கட்டியவள் நிலா என தட்டித்

தடுமாறியதையும்" எனக்கு ஒரு விளக்கமும் நீ சொல்லத் தேவையில்லை என்று அவன் தாய் கூறிவிட்டு போனைக் கட பண்ணியதையும் எதேச்சையாக அவதானித்தவளால்.

தொடர்ந்து எதுவும் கதைக்க மனம் வரவில்லை. மனம் உடைந்துபோன நிலாவுக்கு மன ஆறுதல்கூட கிடைக்கத் தவறியது.

என்ர ஏ... எல்... படிப்பையும் விட்டுட்டு வன்னிக்குப் போனதே இவருக்காகத் தானே.... அந்த நேரம் எவ்வளவு சந்தோசமாய் என்னோடு இருந்தவனுக்கு இப்ப என்னைப் பிடிக்கேல்ல?.... இப்படியெல்லம் ஏன் எனக்கு முதலே தெரியாமல் போயிற்று. ம்.... நேரத்துக்கு நேரம் மனசு மாறுவினமா?.....

நான் இருந்தால் அவன்ர வாழ்க்கை சிதைந்துபோகும் எண்டால் இப்படிக் காலம் முழுக்க வேதனைப் படுகிறதைவிட நான்....

நிலா... நிலா.... அவளின் சிந்தனையைக் குழப்பினான் சாந்தன். அவளின் முகம் வீங்கி சிவந்து போய் இருந்தது. சிவந்த கண்களால் நீர் வடிந்துகொண்டிருந்தது. தெரிந்தும் தெரியாதவனாய் நகர்ந்துகொண்டிருந்தான். அப்போதுதான் பாடசாலையிலிருந்து வந்தான் கதிரவன். அவனையும் கூட்டிக்கொண்டு மில் போனான்.

நிலாவுக்கு சாப்பிடுவதற்கு மனமும் வரவில்லை. நீண்ட நேரத்துக்குப் பின் அழைப்பு ஒன்று வந்தது.

ஹலோ... யார் கதைக்கிறீங்க?.... நான் நிலா.... கிளிநொச்சியிலிருந்து....

நிலாவோ?..... பிள்ளை நீ.... ஈஸ்வரி அக்காவின் மகளோ?... என்ன பிள்ளை இப்படியுமா ஒரு அக்கறையில்லாத பிள்ளையாய் இருப்பீங்கள்?... என்றவாறு அழத்தொடங்கி விட்டாள்.

என்னவோ ஏதோ என்று பதறியநிலா நிலத்தில் புரண்டு கதறக் தொடங்கினாள். யாரு மற்று தனிமையில் இருந்த அவள் அம்மா எந்த உதவிகளும் இன்றி பராமரிப்பற்ற நிலையில் பூட்டப்பட்ட வீட்டினுள் இறந்து மூன்று நாட்ககளைக்கடந்து இருந்தாள். செய்தி கேட்டு மயக்கமுற்ற நிலா அமர்ந்திருந்த வண்டிலோடு சரிந்து விழுந்தாள். தலையிலே அடிபட்டு இரத்தக் காயங்களுடன் ஆடாது அசையாது இருந்தாள். மில்லில் வேலை அதிகம் இருந்தமையால் வீட்டுக்கு வரப் பிந்தும் என கூற அழைப்பெடுத்தான் சாந்தான். அவளுடைய தொலைபேசியும் பல தடவை அலறி ஓய்ந்தது. ஆத்திரம் மேலிட நேரமும் சென்றுவிட

இருட்டில் வீடு வந்தவன். நிலா... எருமை.... உனக்கு எத்தனை தரம் போன் அடிக்கிறது?.... என்றபடி உள்ளே நுழைந்தான். தலையில் இரத்தம் கசிந்தபடி இருந்தது அவள் வளர்ப்பு நாய் "ஜிம்மி" பக்கத்தில் முனகிக் கொண்டிருந்தது. தாயின் கையைப் பிடித்து அம்மா... அம்மா என்று இழுத்துக்கொண்டிருந்தான், கதிரவன்.

'நிலா... நிலா" என அவளைப் பல தடவை கன்னத்தில் தட்டிப் பார்த்தான். உடல் தீயாக கொதித்துக்கொண்டிருந்தது. தண்ணீர் எடுத்து முகத்தை தொட்டுக் கழுவினான். அவள் மூச்சு மட்டும் மேலும் கீழுமாக அசைந்தது. அம்புலன்ஸை அழைத்து அவசரச் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டாள் நிலா.

என்னைவிட்டு போயிட்டியா என்ர செல்லமே?... 'என்னை விட்டுப் போகாதே..." என்று தலையில் அடித்து அழுதபடி ஐ....சி....யு...வின் கதவைத் திறந்தபடி இளைஞன் ஒருவன்

வந்தான். அவனை ஆறுதல் படுத்தியவாறு பக்கத்தில் சிறுமி ஒருத்தியும் அழுதபடி அன்ரன்டரால் தள்ளிவரும் பிரேத வண்டியை ப் பிடித்துக்கொண்டுவந்தாள். அந்தக் காட்சிக் கண்டு திணறிப்போனான் சாந்தான். தடுமாற் றம் நிரம்ப மனசால் ஒடுங்கியவனாக அந்தச் சிறுமி அருகில் சென்று சம்பவத்தை விசாரிக்க முற்படுகையில் அவளது சடலத் தின் விளிம் பில் ஊன்றுகோல் இருப்பதை அவதானித் தான். மௌனமாகிப் போனவன்.

என்குல தெய்வமே நிலா இருக்கிறது போல இரண்டு காலும் இல்லாமல் இருந்தாலும் பரவா யில்லை. என்ர நிலாவுக்கு எந்தத் தீங்கும் வந்திடக் கூடாது....

அவள் சுகமாய் வரவேண்டும். எனப் பிரார்த் தனைகள் செய்தான்.

போராலா எத்தனை பேர் இப்ப அவயங் களை இழந்து பாதிக்கப்பட்டு இருக்கினம். அவர்களுக்கு நாம் ஊன்றுகோலாய் இருந்து ஆறுதல் படுத்தினால் தான் வாழும்போது அவர்களின் மனம் சந்தோசப்படும்.

கைகுடுக்க வேண்டிய நேரத்தில் கைவிட ஏலுமா?.... மௌனமாய் வாசல் தூணுடன் தலையை சாய்த்து நின்ற சாந்தனின் கையை பிசைந்தபடி அப்பா.... வாங்கப்பா அம்மாவைப் பாப்பம்... அம்மா பாவம் அப்பா.. தனியாய் வைத்து ஊசி போடுவினமாம்? வாங்கப்பா?.... பாப்பம்... வாங்கப்பா.... என ஆர்ப்பாட்டம் செய்தான்.

கலங்கிய கண்களை கசக்கியபடி மகனை தன் நெஞ்சுடன் அணைத்துக்கொண்டான் சாந் தன்.

**தர்மினி பத்மநாதன்**, கொக்குவில்.

**எண்ணக்கிண்ணம்**

அ.கௌரிதாசன்,
வள்ளுவர் வீதி,
ஆலங்கேணி, கிண்ணியா.


## முன்னணியில் நிற்பவர் யார்?

ஊனம் பெற்ற வரை
உலகோர் சில பேர்கள்
ஈனப் பிறவி களாய்
எண்ணுவதைக் காணுகிறோம்!
மானம் மிக்கவராய்
மதிபடைத்த வல்ல வராய்,
"ஊனமுற்றோர் இன்றுலகில்
உயர்வாக வாழு கின்றார்!"

மாற்றுத் திறன் ஆளர்
மாநிலத்தில் மற்ற வர்கள்,
போற்றும் விதம் நூறாய்
புரிந்துள்ளார் சாதனைகள்!
ஆற்றல் மிக்கோர் அனைவர்தம்
அவயவங்கள் போலியென-
மாற்றம் பெற்றி ருந்தும்
மற்றவரை மிஞ்சுகிறார்!

கரமிரண்டும் இல்லை யெனினும்
காலிரண்டும் துண்டு பட்டும்,
உரஞ் சேர்க்கும் வாழ்வி யலில்
உயர்வுக்காய் உழைப்ப வர்கள்
"அரம் போலும் கூர்மை யுள்ளார்!"
அவர் தோற்றும் கைப்பணிகள்-
அரங்காம் உலகினையே
அதிசயிக்க வைக் கிறது!

"சந்தமும் அன்னவர் தம்
சரித்திரங்கள் ஏராளம்!"
உந்துருளி ஓட்டு கின்ற
உன்னதமாம் சாதனைகள்!
பந்து விளையாட்டு முதல்
பயிற்சி தரும் பட்டறைகள்-
முந்தும் செயற் பாட்டில்,
"முன்னணியில் நிற்பவர் யார்?"




மனித விருத்தியில் சிகரங்களை தொட்டவர்கள் காலச்சுவட்டில் நிலையான தடம் பதித்தவர்களாக இருக்கின்றனர். பிறந்தோம், வாழ்ந்தோம் படித்தோம் என்றில்லாமல் தமது வாழ்வு பிறருக்கும் ஊக்க சக்தியாக இருப்பதைக் கண்டு மன நிறைவடைபவர்கள் நிச்சயம் போற்றுதற்குரியவர்கள். அப்படிப்பட்ட ஒருவருடனான சந்திப்பு முற்றத்து மல்லிகையாக வலு இதழ் - 08ல் மிளிர்கின்றது.

அலுவலகச் சூழல் மிகவும் பரபரப்பாக இருக்கின்றது. நல்லூர் பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைப்பிரிவில் கடமையாற்றும் செல்வி நடராஜாமூர்த்தி கீதாஞ்சலி அவர்களை மதிய விருந்துப் பொழுது ஒன்றில் சந்திக்கின்றோம் மலர்ந்த முகம், நிதானமான உரையாடல் பாங்கு, அவருக்கே உரித்தான கடமை புரியும் இயல்பு எப்படிச்சாத்தியமாகும் எனக்குள் ஆயிரம் கேள்விகள்

*வணக்கம் கீதாஞ்சலி*

வணக்கம்

*முற்றத்து மல்லிகைப்பகுதிக்கு செவ்வி வழங்க உடன்பட்டமைக்கு வலு சார்பாக தங்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.*

எனக்கும் வலு சஞ்சிகையின் முற்றத்து மல்லிகைப் பகுதியில் கருத்துப் பரிமாறுவதில் மகிழ்ச்சி இருக்கிறது.

*கேள்வி:- கீதாஞ்சலி உங்களைப் பற்றி சற்றுச் சொல்லுங்கள்*

பதில் :- நான் விடத்தல் பளை மிருசுவில் என்னும் இடத்தில் நடராஜமூர்த்தி சுகந்திரா தேவி தம்பதியினருக்கு 03.07.1981அன்று இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தேன். தற்போது இல.9 உடையார் வீதி, பழம் வீதி, கந்தர்மடம்எனும் இடத்தில் வசித்து வருகின்றேன். எனது தந்தை ஒரு ஓய்வு பெற்ற கிராம சேவகர். தற்போது காலமாகி விட்டார். எனது தாயார் வீட்டுப்பணிகளை ஆற்றி வருகின்றார்.

உண்மையில் என்னுடன் ஒரு ஆண் சகோதரர் நாங்கள் இரட்டையர்களாகப் பிறந்தோம். ஒரு நிமிடம் அண்ணாவை விட நான் பூமிக்கு

வருவதற்குதாமதித்து இருந்தேன்.

சொல்லிவிட்டு சிரிக்கிறார்.

எனக்கு ஓர் இளைய சகோதரியும் உள்ளார்.

எனது மூத்த சகோதரன் வைத்தியராகவும் இளைய சகோதரி வங்கி ஒன்றிலும் பணியாற்றி வருகின்றனர்.

*கேள்வி: உங்கள் பாடசாலை கல்வி பற்றி சற்றுச்சொல்லுங்கள்*

பதில்:- 1ம் தரத்தில் இருந்து 5ம் தரம் வரை யாழ். விடத்தல்பளை கமலாசினி வித்தியாலயத்திலும் தரம் - 06 முதல் தரம் - 11 வரை யாழ். உசன்இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் கற்றேன். உயர்தரத்தினை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பயின்று 2001ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவிற்கு தெரிவானேன்.

*கேள்வி:- பாடசாலை கல்விபயிலும் காலத்தில் தாங்கள் யாதேனும் சவால்களை எதிர்கொண்டிருந்தீர்களா?*

பதில்:- நான் கல்வி கற்ற அனைத்துப் பாடசாலைகளுமே எனக்கு மிகவும் வாய்ப்பான சூழலை ஏற்படுத்தி தந்தன என்று தான் கூற வேண்டும். அதனால் பாடசாலை பருவத்தை ஒரு சவால் நிறைந்த பருவமாக என்னால் உணர முடியவில்லை.

*கேள்வி: உங்கள் பல்கலைக்கழக காலம் பற்றி உங்களால் கூற முடியுமா?*

பதில்: எல்லோருக்கும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு கிட்டுவதில்லை. எனக்கு அது கிட்டியதேபெரும்பேறாகநான்கருதுகின்றேன். பாடசாலை சமூகம் போல் அல்லாமல் பல்கலைக்கழக சமூகம் புதிய அனுபவங்களை எனக்குத் தந்தது. மானிடவியல் சிறப்புக் கலையைப் பயின்று வெற்றி கரமாக எனது கல்வியை நிறைவுசெய்வதற்குதுறைத்தலைவர், விரிவுரையாளர்கள், சக மாணவ நண்பர்கள் வழங்கிய ஒத்துழைப்பு மிகப் பெறுமதி வாய்ந்தது.

*கேள்வி:- நீங்கள் எப்பொழுதாவது உங்கள் நிலை குறித்து மனக் கவலை பட்டதுண்டா?*

பதில்:- ஒருபோதும் இல்லை என்று தான் சொல்லுவேன். பிறப்பில் இருந்து ஒரு காலும் ஒரு கையும் இஸ்திரமான செயல் திறன் இன்றி இருந்த போதும் எனது பெற்றோர் எனது சகோதரன் சகோதரி எல்லோருமே அவர்கள் செல்லும் இடமெல்லாம் என்னையும் அழைத்துக் கொண்டு செல்வார்கள் ஒரு வேளை நான் மறுத்தாலும் கூட அவர்கள் என்னை விட்டு விடுவதில்லை. என்னை தங்களோடு அழைத்துச் செல்வதை மகிழ்ச்சியான அனுபவமாக அவர்கள் உணர்கின்றார்கள். அதனாலே என்னவோ எனது நிலை குறித்து மனக் கவலையுறும் நிலை ஏற்படவில்லை.

*கேள்வி:- உங்கள் முன்னேற்றத்திற்கு பக்க பலமாக இருந்தவர்கள் பற்றிச் சற்று சொல்லுங்களேன்?*

பதில்:- எனது பெற்றோர்கள், உடன் பிறப்புக்கள், பாடசாலை சமூகத்தைச் சார்ந்த ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பாடசாலைக் காலத்தில் இருந்து பல்கலைக்கழக காலம் வரை என்னோடு வாழ்ந்த தோழியர்கள், தோழர்கள் என அனை

வரையுமே நான் சொல்ல வேண்டும். தற்போது நான் நல்லூர் பிரதேச செயலகத்தின் அடையாள அட்டைப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றுகின்றேன் என்றால் இவர்கள் வேராக இருந்ததன் விளைவே அது. அத்தோடு நான் பணியாற்றுகின்ற வேலைச் சூழலும் எனக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. சக உத்தியோகத்தர்கள் மேல் அதிகாரிகள் என எல்லோருமே என்னோடு நிகழ்த்தும் இடைவினை நான் சிறப்பாக பணியாற்றுவதற்கு உதவிகரமாக உள்ளது.

*கேள்வி:- நீங்கள் ஒரு பெண்ணாக இருந்து மாற்றுத் திறனாளிகளாக இருக்கின்ற பெண்களுக்கு என்ன கூற விரும்புவ்கின்றீர்கள்?*

பதில்:- வலு இழந்த பெண்கள் தங்கள் இயலுமைக்குட்பட்ட வகையில் முடியுமானவற்றை சாதிக்கத் தவறக் கூடாது. தங்கள் சுய பாதுகாப்பில் அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும். இதுவே நான் அவர்களுக்கு தரும் செய்தி.

*கேள்வி; உங்கள் ஓய்வு நேரத்தை நீங்கள் எவ்வாறு செலவிடுகின்றர்கள்?*

பதில்:- கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. தரம் 01 முதல் 05 வரையான மாணவ மழலைகளுக்கு தற்போது நான் வீட்டில் பாடம் கற்பித்து வருகின்றேன். அது எனக்கு மிகுந்த மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றது. இது தவிரவும் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் கணினி பயிற்சியிலும் ஈடுபட்டு வருகின்றேன்.

*கேள்வி: சமூகத்திற்கு நீங்கள் கூறும் செய்தி யாதேனும் உண்டா?*

பதில்:- நிச்சயமாக உண்டு. வலு இழந்த பிள்ளைகளின் வாழ்வு பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. பிள்ளைகளின் திறன்களை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ற களத்தை வகுத்துக் கொடுப்பதில் சமூகத்தில் இருக்கும் ஏனையவர்களை விட பெற்றோர்களே அதிக அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும்.

நன்றி கீதாஞ்சலி, உங்கள் வாழ்க்கை பலருக்கு பாடமாகின்றது. வலு இழப்பு வாழ்வை அஸ்தமிக்கச் செய்யும் குறிகாட்டி இல்லை என்பதை உங்கள் வாழ்வு நிரூபணமாக்கி இருக்கின்றது. உங்கள் வாழ்வு மேலும் வளம் பெற வலு சஞ்சிகை சார்பாக நாம் வாழ்த்துகின்றோம்.

முற்றத்து மல்லிகைப் பகுதிக்காக என்னை செவ்வி கண்டமைக்கு நன்றி. வலு சஞ்சிகை மேலும் வளம்பெற இத் தருணத்தில் நான் பிரார்த்திக்கின்றேன்.

முற்றத்து மல்லிகை எட்டாவது பகுதியில் சோதனைகளை சாதனைகள் ஆக்கி வாழ்வில் நிமிர்ந்த ஒரு பெண்ணின் வாழ்வியலை பதிவாக்கிய திருப்தியோடு நல்லூர்ப் பிரதேச செயலகத்தை விட்டு வெளியேறுகின்றேன்.

நன்றி

**முற்றத்து மல்லைகைப் பகுதிக்காக,**
**க.தர்மசேகரம்**

# எழுதுங்கள் வெல்லுங்கள்

## போட்டி இல.08 வினாக்கள்

1. இலங்கையின் தற்போதைய சபா நாயகரின் பெயர் என்ன?
2. முதல் உலகப் போர் இடம் பெற்றகாலம் யாது?
3. காந்திக்கு மகாத்மா எனும் பட்டத்தை வழங்கியவர் யார்?
4. சர்வதேச சிறுவர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
5. முதலாவது உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டி எப்போது எங்கே நடைபெற்றது.
6. ஸ்டீபன் வில்லியம் ஹாங்கிங் (Stephen william hawking) எத்துறையில் யாழ். பெற்று விளங்குகிறார்?
7. 2014 இல் குளிர் கால ஒலியில் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்றன?
8. பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் ஒலிம்பிக் குழுவின் ஆங்கில சுருக்கக் குறியீடு யாது?
9. இந்தியாவின் முதன்முதலாவது I F P பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து I PF அதிகாரியான பார்வையற்ற மாணவி பெயர் என்ன?
10. கைதடி நவில்ட் பாடசாலையில் எவ்வகையான மாற்றுத் திறனாளிகள் கல்வி கற்கிறார்கள்?

**இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள். இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.**

**விடைகளை 15.03 2016 க்கு முன்னர் எமக்கு கிடைக்ககூடியவாறு அனுப்பிவையுங்கள். சரியான விடைகளை எழுதும் வெற்றியாளர்களுக்கு முதல் மூன்று பரிசில்களும் 10 ஆறு தல் பரிசில்களும் வழங்கப்படும்.**

### போட்டி இல - 07 இல் வெற்றிபெற்றோர் விபரம்

கு.ஜெனனி, இணுவில் கிழக்கு, இணுவில்.

K.தயாமினி, இணுவில் மேற்கு, இணுவில்.

விடைகள் போட்டி இல. 08

# எழுதுங்கள் வெல்லுங்கள்

01.........................................................................................

02.........................................................................................

03.........................................................................................

04.........................................................................................

05.........................................................................................

06.........................................................................................

07.........................................................................................

08.........................................................................................

09.........................................................................................

10.........................................................................................

1. முழுப் பெயர்: .........................................................................

2. தபால் முகவரி: .......................................................................

3.தொலைபேசி இலக்கம் ................................................................

4. பிறந்த ஆண்டு, மாதம், திகதி ....................................................

**போட்டி இல - 07 விடைகள்**

1. 15ஆவது தேர்தல்
2. 1974 ம் ஆண்டு
3. ஸ்புட்னிக் - 01
4. பேகன்
5. அனோபிளிஸ்
6. 200° அகண்ட கோணம்
7. கருவி, நவில், வாழ்வகம்
8. ரிச்சட் பெர்ன்ஸ்டீன்
9. ஜெனி பிறிக்ஸ் பாஸ் தம்பதியினர்
10. அமெரிக்கா

அனுப்ப வேண்டிய முகவரி :

எழுதுங்கள் வெல்லுங்கள்
கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல.1166/15 அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

## கருவியின் தடங்கள்

### சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் 2015



















தொலை தூரம் ஆனாலும் தொடுவானம் நோக்கி
திசை தேடி இசைவோடு விசையாகச் செல்வோம்
வலிதான மனதோடு வளமாக நின்று
விழியாக வழிகாட்டி துணையாக நிற்போம்

நதியாக நடை போட்டு விதிதன்னை வென்று
நலமாக அனைவர்க்கும் நயமாக நிற்போம்
புதிதான உலகத்தில் கதிராக மாறி
புது வாழ்வு தனைக் கண்டு மகிழ்வாக வாழ்வோம்


இறுவெட்டுப் பதிப்பு
ஸப்தமி கலையகம்
நாச்சிமார் கோயிலடி
யாழ்ப்பாணம்
0750394989

தேவி Printers,
140/1, Manipay Road, Jaffna.
021 300 3030